# செம்பதாகை

மலர்: 7
இதழ்: 6
ஆனி 1985
விலை ரூபா 2-00
புரட்சிகர வெகுஜன ஏடு


# பூட்டான் பேச்சுவார்த்தை வெற்றி பெறுமா?

முழு நாட்டையும் மக்களையும் அச்சுறுத்தி நிற்கும் இனப் பிரச்சினையின் தீர்வுக்கென பூட்டானில் இடம்பெற உள்ள பேச்சுவார்த்தைகள் கடந்த காலங்களைப் போல் தோல்வி அடைந்தால் நாடு பெரும் நாசத்தையே எதிர் கொள்ளும். வெற்றிபெற்றால் நாடும்—மக்களும் நன்மை அடைவர். ஆனால் வெற்றி பெறுமா என்பதே மக்கள் மத்தியிலான பலத்த கேள்வியாகும்.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலே இமயமலைச் சாரலில் அமைந்துள்ள பூட்டான் தேசத்து தலைநகரான திம்புவில் இலங்கையின் இனப் பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தைகள் நடைபெற உள்ளன. இலங்கையின் எல்லைகளுக்குள்ளேயே இலகுவாகப் பேசித் தீர்வு கண்டிருக்க வேண்டிய ஒரு உள்நாட்டுப் பிரச்சினையை இவ்வளவு தூரத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய மோசமான நிலையை உருவாக்கியமைக்காக இந்த அரசு மட்டுமன்றி எதிர்த் தரப்பில் உள்ளவர்களும் கூட வெட்கப்படாமல் இருக்கமுடியாது. இருந்த போதிலும் சூழ்நிலைகளின் நிர்ப்பந்தங்களால் அரசு பேச்சு வார்த்தைக்கு முன் வந்ததையும், அதன் முன்னோடியாக 'யுத்த நிறுத்தம்' செய்ய இணங்கியமையும் வரவேற்கப்பட வேண்டியவையாகும். அதேபோல் நாம் இடைவிடாது வற்புறுத்தி வந்த தமிழர் கூட்டணித் தலைவர்களோடும், தீவிரவாத இயக்கங்களோடும் இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்ற முடிவை அரசு எடுத்தமையும் வரவேற்கப்படவேண்டிய தொன்றாகும். அரசின் உள்நோக்கம் கடந்த காலத்து கபடத்தனமான செயல்களைப் போன்று இருக்குமா? இல்லையா என்பது கேள்விக்குரிய ஒன்றுதான். ஆனால் முழு மக்கள் முன்னிலையிலும் சர்வதேசப் சமூகத்தின் பார்வையிலும் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு முன்வந்த அரசின் முடிவை எக்காரணம் கொண்டும் நிராகரிக்க முடியாது, அப்படி நிராகரிக்க முற்படுவது விவேகமான அரசியல் முடிவாகவும் இருக்காது.

பூட்டான் பேச்சு வார்த்தைகள் வேண்டாம் என தெற்கிலும் வடக்கிலும் இருந்து குரல்கள் சில ஒலிக்கின்றன. இக் குரல்களை உற்று நோக்கின் அவை அரசியல் லாபம் கருதும் தீவிர இனவாத சக்திகளின் குரல்கள் என்பது தெளிவாகும். இவர்களை விலக்கி விட்டுப் பார்த்தால் நியாயமான அரசியல் தீர்வையும் அதற்கான பேச்சு வார்த்தையையும் அனைத்து மக்களும், ஸ்தாபனங்களும் வரவேற்பதையே காணமுடிகிறது.

பூட்டான் பேச்சு வார்த்தை வெற்றி பெறுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஒரு கேள்வியாக எழ நியாயம் இருக்கின்றது. அதாவது கடந்த காலத்தில் இனப் பிரச்சினை சார்பாக எத்தனை பேச்சுவார்த்தைகள், எவ்வளவு ஒப்பந்தங்கள், எப் பேர்ப்பட்ட வாக்குறுதிகள். அவை யாவும் பொய்யாய் கனவாய் பழம் கதையாய் போன கசப்பான கடந்தகாலத்தின் நிழல்கள் மக்கள் மனத்திரையில் வீழ்வதாலேயே இக்கேள்வி எழுகிறது.

ஆதலால் பேச்சுவார்த்தையின் வெற்றிக்கான அதிக பொறுப்பு இலங்கை அரசைச் சார்ந்த ஒன்றாகவே உள்ளது. ஏற்கனவே தீர்வுக்கான ஆலோசனைகள் என்று கூறிக் கீறப்பட்ட சிறு வட்டத்திற்குள் அரசு நின்று சுழர முற்பட்டால் தீர்வு என்ற இடத்தை எட்டமுடியாது. அந்த வட்டத்திற்கு வெளியில் வந்து ஏற்கனவே கீறிய வட்டத்தை விஸ்தரித்துக்கீற அரசு முன்வரல்வேண்டும். அப்படி அரசு முன்வருமானால் தமிழ் மக்கள் சார்பாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் பிரதிநிதிகளும் தமது நிலையில் சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய முன்வருவது தவறான ஒன்றல்ல. இரு தரப்பும் தத்தமது நிலையில் இருந்து விடுபடாது ''விடாக் கண்டன் கொடாக் கண்டன்'' என்ற நிலையில் இருக்க முற்பட்டால் பூட்டானுக்குப் போவதில் பயன் ஏதும் இருக்கப்போவதில்லை.

தமிழ்பேசும் மக்களின் அடிப்படையான பிரச்சினைகளுக்கு குறைந்தபட்சமாவது தீர்வு ஏற்படக் கூடிய அதிகாரங்கள் கொண்ட சுயாட்சி அமைப்பை எந்தப் பெயரிலாவது பெற முடிந்தால் அதைத் தட்டிக்கழிக்க எவரும் முற்படக்கூடாது. இடைக்காலத் தீர்வானது ஒரு நீண்டகால இறுதித் தீர்வுக்கு வழி சமைக்கக்கூடியது என்ற நிதானமான அரசியல் விவேகம் உணரப்பட்டால் அது தமிழ் மக்களுக்கு முழு நாட்டிற்கும் ஆரோக்கியமானதாகும். அதேபோல் அரசு தனது அண்மைக்கால வீறாப்புப் பேச்சுக்களையும், சவால்களையும், சபதங்களையும் தூரவீசிவிட்டு நியாயமான தீர்வுக்கு முன்வந்தால் வரலாறு அவர்களுக்கு இனப் பிரச்சினையின் விடயத்தில் ஒரு உரிய இடத்தை நிச்சயம் வழங்கும். இதில் இருதரப்பாரும் போலிக் கௌரவத்தையோ அன்றி குறுகிய அரசியல் லாபங்களையோ, சிறுபிள்ளைத்தன அரசியல் போக்கையோ கடைப்பிடியாது இந் நாட்டின் அனைத்து மக்களினதும் நல்வாழ்வின் அடிப்படையில் நியாயமான தீர்வுக்கு வர பன்முகப் பங்களிப்பை

(6-ம் பக்கம் பார்க்க)

# அநுராவே! பொதுத்தேர்தல் வேண்டுமா? இனவாதத்தை விட்டால் வேறு கதி இல்லையா?

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்த பேச்சுவார்த்தைகள் இடம் பெற உள்ளன. இத்தகைய முயற்சியை நாட்டின் நலன் விரும்பும் அனைவரும் ஆதரிக்கின்றனர். அதேவேளை தீவிர பௌத்த மதவாதிகளும், கடைக்கோடி இனவாதிகளும், இவர்களைத் தூண்டி விட்டு அரசியல் லாபம் சம்பாதிக்க முனையும் அதிகார மோகங் கொண்டோரும் அரசியல் தீர்வு ஏற்படுவதை தடுக்க முனைகின்றனர். இத்தகைய சக்திகள் இன்று மட்டுமல்ல ஏற்கனவே மீண்டும் மீண்டும் இவ் இழி தொழிலையே மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் கடந்தகாலம் போன்று இன்றைய நிலைமை இல்லை என்பதை இவ் இனவாத சக்திகள் இன்னும் புரிந்து கொள்ள வில்லைப்போலும்.

இத்தகைய இனவாத, மதவாத, ஆளும் அங்கலாய்ப்புக் கொண்டவர்களுக்கு மேலும் உற்சாகம் தரும் பேச்சுக்களையும் அறிக்கைகளையும் எதிர்க்கட்சித் தலைவரான திரு. அநுரா பண்டாரநாயக்கா வெளியிட்டு வருகிறார். இனப் பிரச்சினைக்கான பேச்சு வார்த்தை தற்போது தேவை இல்லை என்பதுபோல் கூறியுள்ளார், அதாவது பயங்கரவாதத்தை ஒழித்த பின்பே பேச்சுவார்த்தைக்குப் போக வேண்டும் என்று ஆலோசனை வழங்கி இருக்கின்றார். அதற்கும் மேலால் இனப்பிரச்சினைக்கான தீர்வு பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என வற்புறுத்துகிறார். பொதுத்தேர்தல் நடத்தாது விட்டால் தீர்வின் மீது சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என தீவிர பௌத்த மதவாதிகள் அநுராவின் தேர்தல் கோரிக்கைக்கு பக்கச் சப்பை கட்டுகிறார்கள். அநுராவின் பேச்சுக்களைப் பார்த்தால் சிங்கள இனத்திற்கும் பௌத்த மதத்திற்கும் தன்னைவிட வேறு பாதுகாப்பாளன் இலங்கையில் இருக்க முடியாது என்பதுபோல் துள்ளி மிதிக்கிறார். பாவம் பெற்ற பதவியைப் பாதுகாக்க வேண்டுமல்லவா?

அநுரா ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருக்கிறார். அவருக்கு வயதும் அறிவும் குறைவு தான். என்றாலும் அவரது பெற்றோர்களின் அனுபவங்களில் இருந்தாவது நல்லவற்றை எடுத்திருக்க வேண்டும். தந்தையும் தாயும் ஆற்றல்கள் பல நிறைந்தவர்கள். அவர்களிடம் இருந்து தனயனான அநுரா நல்லவற்றை எடுத்துக் கொண்டு தீயனவற்றை வீசி விட்டு அரசியலில் வழி நடந்தால் அவருக்கான எதிர்காலம் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் தந்தை தாயிடம் உள்ள நல்லவற்றை தொட்டும் பார்க்காது அவர்கள் கொண்டிருந்த தீய அம்சமான இனவாதத்தை மட்டும் அநுரா உற்சாகமாகக் கையேற்றுள்ளார் போலும். ஏனெனில் இனவாதம் பேசுவதற்கும் அதன் மூலம் மக்களை ஏமாற்றுவதற்கும் அரசியலில் குறைந்தபட்ச அறிவு தானும் தேவை இல்லைத் தானே.

(6-ம் பக்கம் பார்க்க)

# அமை. அத்துலத்முதலியின் தென் கொரியப் பயணம்

## ஆயுதம் வாங்கிக் குவிக்கவா?

தற்போதைய அரசாங்கத்தில் சர்வ அதிகாரமும் கொண்ட ஜனாதிபதிக்கு அடுத்ததாக அமைச்சர்கள் மட்டத்தில் முதன்மைப் படுத்தப்படுதப்படுபவர் பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத் முதலியாவர். அவ்வாறு ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு உரியவரான அமைச்சர் அத்துலத் முதலி அண்மையில் திடீரென தென் கொரியாவிற்கு பயணமாகி நாடு திரும்பி உள்ளார். தென்கொரியப் பயணத்திற்கான காரணங்களோ அன்றி அதுபற்றிய விளக்கங்களோ ஒன்றும் வெளிவரவில்லை. அதனால் தென் கொரியப் பயணம் ஆயுதக் கொள்வனவாக இருக்கும் என்பதே பலரது ஊகம். இதில் தாராள உண்மை உண்டு. பயணம் சென்றவர் ஆயுதக் கொள்வனவுக்குப் பொறுப்பானவர். சென்ற நாடும் பிற்போக்குக்கு கூசாமல் ஆயுதம் வழங்கும் ஒரு அமெரிக்காவின் கையாள் நாடாகும். அமெரிக்காவின் துருப்புக்கள், யுத்ததளபாடங்களுடன் கூடிய பாரிய தளத்தைக் கொண்டுள்ள தென் கொரியா அமெரிக்காவின் செல்லப்பிள்ளை நாடு. தனி நபர்—தனிக்கட்சி சர்வாதிகாரத்திற்கு இந் நாட்டில் இருந்து பல அனுபவங்களை ஏற்கனவே ஜே. ஆரும்.—யூ. என். பியும் பெற்றுவந்துள்ளனர். மேலும் எதிர்கால

(6-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களும் யுத்த நிறுத்தமும்

இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் புதுடில்லியில் சந்தித்துப் பேசியதன் அடிப்படையில் இருதரப்பினரும் பதினெட்டு வாரங்களுக்கு வன்செயல்களை நிறுத்தி வைப்பது என்ற 'யுத்த நிறுத்தம்' நடை முறைக்கு வந்துள்ளது. இதன் மூலம வடக்கு கிழக்கின் தமிழ் மக்கள் மட்டுமன்றி முழு நாட்டு மக்களும் ஆறு ல் பெருமூச் சொன்றை விடச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு யுத்தநிறுத்தம் நிராகரிக்கக் கூடியதொன்றல்ல. வரவேற்கப்பட வேண்டியதாகும். குறிப்பாகத் தமிழ் மக்கள் பெருமளவில் உயிர், உடமைகள் இருப்பிடங்கள் இழந்த நிலையிலும், அன்றுட வாழ்வு சீர்குலைந்த நிலையிலும் ஒரு ஆறுதல் நிலை அவசியமானதேயாகும்.

இவ் யுத்த நிறுத்தம் அமுலில் உள்ள வேளை இனப் பிரச்சினையின் தீர்வுக்கு பேச்சவார்த்தை இடம்பெற உள்ளது. அதே வேளை அரசு தன்னை அதிகரித்த போர் நிலைக்குத் தயார் படுத்தாது என யாரும் எதிர்பார்க்கமுடியாது, அதற்கு ஆ ரமக அரசுதரப்பின் தென் கொரியாவிற்கான திடீர் விஜயத்தைக் குறிப்பிட முடியும். ஆதலால் அரசு யுத்த நிறுத்த காலத்தை தனது உள் நோக்கத்திற்குப் பயன்படுத்துமா அல்லது குறைந்தபட்சத் தீர்வுக்கு வரவாவது முயலுமா என்பதைச் சற்றுப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்,

மறுபுறத்தில் தமிழ் மக்களுக்கு யுத்த நிறுத்தம் வேண்டாம் என்று ஒருமுனை வாதப் போக்கில் கூற முற்படுவதும் நியாயமானதொன்றல்ல. தமிழ் மக்களுக்கு நிச்சயம் ஆறுதல் வேண்டும். ஏற்பட்ட ஆழமானகாயங்களுக்கு சிகிச்சைபெற கட்டாயம் ஒய்வு வேண்டும். இதை மறுத்து இருபத்திநாலுமணி நேரமும் முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களும் போராட்டம் என்று கூறுவது அர்த்தமற்றதாகும். போராட்டம் என்பது ஒரு இலக்கை அடைவதற்கான வழிமுறையாகும். அந்த வழிமுறை நீண்டதோர் பயணத்தின் மூலமே எடுத்துச் செல்லப்பட வேண்டும். அந்தப் பயணத்தில் நெளிவு, சுளிவு, விரைவு, ஒய்வு, உச்ச நிலை மந் நிலை என்பன பே ன்று யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பன வரவே செய்யும் எனவே தற்பே தைய யுத்த நிறுத்த சந்தர்ப்பத்தை எதிரி பயன்படுத்துவதுபோல் மக்களின் உண்மையான விடுதலைப் போராளிகளால் பயன்படுத்த முடியும். அது அவரவர் கொள்கை கோட்பாட்டு நிலையைப் பொறுத்தவிடயம். ஆனல் தமிழ் மக்களுக்கு ஒரு ஆறுதல் நிலையாகக் கிடைத்த இப் பதினெட்டுவார காலத்தை குழப்ப முயல்வது அர்த்தமற்ற மக்கள் விரோதச் செயல் என்றே கூறவேண்டும்.

மேலும் யுத்த நிறுத்தம் இரு தரப்பிலும் மீறப்படுவதாகப் பரஸ்பரம் குற்றஞ் சாட்டப்படுகிறது. அரசுக்கும்

# சம்பவங்களும் அதன் போக்குகளும்

சமஞானி

தீவிரவாத இயக்கங்களுக்கு மிடையில் மட்டும் யுத்த நிறுத்தமாக இல்லாது மக்களுக்கு எதிரான செயல்களிலும் யுத்த நிறுத்தம் வேண்டும். இன்று நிராயுதபாணியான தமிழ் மக்கள் மத்தியில் இனம் தெரியாத சிலர் தொடர்ந்து கொள்ளையில்|ஈடு பட்டு வருகிருர்கள். இவர்கள் யார்? இவர்கள் தமிழ்மக்களின் மேல் தொடுத்துள்ள கொள்ளை யுத்தத்திற்கு நிறுத்தம் இல்லையா? இவ்வாறு தமிழ் மக்கள் ஏங்குகிருர்கள். ஆயுதப்படைகளின் பக்கத்தால் வரக்கூடிய அச்சுறுத்தல் தற்போது யுத்த நிறுத்தத்தால் நிறுத்தப்பட்டதை ஆறுதல் என நினைக்கும் தமிழ் மக்கள் கொள்ளையர்களையும், ஆயுதம் தரித்த சண்டியர்களையும் கண்டு ஏங்கி நிற்கும் நிலை காணப்படுகின்றது. இந்த நிலைக்கு அவசியம் 'யுத்த நிறுத்தம்' வேண்டும். இவ் யுத்த நிறுத்தத்திற்கு யாருடன் பேசுவது யாருடன் ஒப்பந்தத்திற்கு வருவது. தமது கண்முன்னே நடப்பவை யாவற்றையும் தமிழ் மக்கள் சரியான வழியில் எடைபோடுவது அவசியம். ஏனெனில் எதிர்காலத்திலாவது தவருனவற்றுக்கு ஆதரவு தராமல் இருப்பதற்காக.

❀

# கொள்ளைகள் நடத்துவது கொம்யூனிசம் அல்ல!

தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கொள்ளைகள் நாளாந்தம் பெருகிக் கொண்டே செல்கின்றன இக் கொள்ளைகள் சிறு அளவிலும் பெரும் அளவிலும் நடைபெற்றபோதிலும் இவற்றுக்கு உரிமை கே ரப்படுவதில்லை. ஆயுதம் ஏந்திய இனம் தெரியச

தப்பட்டது. அதேபோல் அடகு கடைகளில் அடகு வைப்பவர்கள் சாதாரண மக்கள்தான். கை மாறி அடகு வைத்து காசு எடுத்து விவசாயம் செய்யும் விவசாயியை இவ்வாறான கொள்ளைகள் எவ்வாறு பாதிக்கும் என்பதை சம்மந்தப்பட்ட மக்கள் மத்திக்குச் சென்ருல் மட்டுமே தெரிந்து கொள்ள

தமிழ் மக்கள் மிகவும் திர்க்கதியான நிலையில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களது எதிர்கால விடுதலைக்கும் விமோசனத்திற்கும் சரியான கொள்கை கோட்பாடு, நடைமுறை ஆகிய ஆழமான சிந்தனையின் மூலம் தேடப்பட வேண்டும். நடப்பவை சகலதிற்கும் ஆமாம் சாமி போடும் நிலை

இவ் யுத்த நிறுத்தம் அமுலில் உள்ள வேளை இனப் பிரச்சினையின் தீர்வுக்கு பேச்சு வார்த்தை இடம்பெற உள்ளது. அதே வேளை அரசு தன்னை அதிகரித்த போர் நிலைக்குத் தயார் படுத்தாது என யாரும் எதிர்பார்க்கமுடியாது, அதற்கு ஆதாரமாக அரசுதரப்பின் தென் கொரியாவிற்கான திடீர் விஜயத்தைக் குறிப்பிட முடியும். பயணத்தின் மூலமே எடுத்துச் செல்லப்பட வேண்டும். அந்தப் பயணத்தில் நெளிவு, சுளிவு, விரைவு, ஒய்வு, உச்ச நிலை மந்த நிலை என்பன போன்று யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பன வரவே செய்யும். எனவே தற்போதைய யுத்த நிறுத்த சந்தர்ப்பத்தை எதிரி பயன்படுத்துவதுபோல் மக்களின் உண்மையான விடுதலைப்

# சட்டை மாற்றிய சாமியார்

சேதி தெரியுமோ?
எங்களூர்ச் சன்னுசி மடத்துக்குப் புதிதாகச்
சாமியார் ஒருவர் எழுந்தருளி இருக்கின்றார்.
காவியுடுக்காத சன்னுசியார், பழைய
புத்தகங்களெல்லாம் புழுதியிலே விட்டெறிந்து
செஞ்சட்டை தன்னைச் சேற்றில் முழுகடித்து
லட்சியங்கள் கைவிட்டுக் கொள்கை தலைமுழுகி
முற்றும் துறந்த முனிவர் எனச் சொல்கின்றார்.
ஒரேழு ஊர்வலங்கள் பதினுறு பொதுக்கூட்டம்
இரண்டு பொதுத்தேர்தல் பார்த்துப் பின்பிறகு
இரவோடிரவாகப் புரட்சி இறங்கிவந்து
சமுதாயம் உருப்பட்டுப் புதுவுலகம் உருவாகக்
காணு காரணத்தால், இனிமேலுங் காத்திருந்து
இன்றைக்கு நாளைக்குள் சோசலிஸம் வாராதேல்
பிறவி எடுத்த பயன் பாழாகிப் போமென்று
நடுச்சாம வெய்யிலிலே ஞானஒளி தெரிந்த
மாமுனிவர் நம்மூர் மடத்துக்கு வந்துள்ளார்.
ஆற்றேடு போவதற்கும் அலையோடுழல்வதற்கும்
கொம்யூனிஸ்ற் காரர்களை எதிர்த்திசையில் வீசுகிற
காற்றுள்ள போதே தூற்றிப் பயன் பெறவும்,
வல்ல முனிவர் வழிபட்டால் வழியுரைப்பார்.
குறுக்கே கதையாமற் கைகட்டித் தலைவணங்கிக்
குருவே சரண் என்று கும்பிட்டு நிற்பாயேல்
ஆசீர்வதித்து
ஆன்மீகம்பேசி, அகிம்சை வழியினிலே
இனவெறுப்பும் போதித்து
படுகொலைக்கும் நல்ல ஞாயம் பலவுரைப்பார்,
எதிர்த்துக் கதைத்தால் ஏளனமாய்ப் பார்ப்பார்,
தனக்கே விளங்காத வார்த்தைகளால் ஏசி
சாபங்கள் போடுவதில் சன்னுசியார் சமர்த்தர்.
எங்களூர்ச் சன்னுசி மடத்து மனேச்சர்மார்
கொம்யூனிஸ்ற் பேய்களுக்குக் கொம்பறுக்க அவதரித்த
ஞானச்சுடரென்று போற்றுகிறார். என்றாலும்
சாமியார் வாயால் வரங்கேட்க வேண்டுமெனில்
நில்லாதே ஓடு மடத்தடிக்கு—நாளை ஒரு
ஞானச்சுடர் புதிதாய் வந்தால் மனேச்சர்மார்
சாமியார் கையில் சாமரத்தை வைப்பாரோ,
கால்கழுவ வாளியும் செம்பும் தருவாரோ.

— ஸ்வப்ந —

தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கொள்ளைகள் நாளாந்தம் பெருகிக் கொண்டே செல்கின்றன. இக் கொள்ளைகள் சிறு அளவிலும் பெரும் அளவிலும் நடைபெற்ற போதிலும் இவற்றுக்கு உரிமை கோரப்படுவதில்லை. ஆயுதம் ஏந்திய இனம் தெரியாத இளைஞர் சேஷ்டி என்பதைத் தவிர வேறு எதையும் காணமுடியாத நிலை நிலவுகின்றது. ஓரளவு மக்கள் ஆதாரத்துடன் கொள்ளை நடத்தியவர்களை இனங்கண்டு கொண்டாலும் அதை வெளியே பகிரங்கப்படுத்த அஞ்சுகின்ற நிலையிலேயே காணப்படுகின்றனர். ஏனெனில் எதற்கெடுத்தாலும் ஆயுதம் நீட்டப்படுகின்ற காலமல்லவா?

இவ்வாறு கொள்ளைகள் தொடர்ந்து கொண்டு செல்லும் இவ்வேளை இக் கொள்ளைகள் நியாயமானவை என்றும், உள்ளவனிடத்தில் தானே கொள்ளையடிக்கப்படுகின்றது என்றும், இதற்காக நாம் ஏன் கவலைப்படவேண்டும் என்றும் சிலர் கொள்ளைகளுக்கு நியாயம் கற்பிக்க முயலுகிறார்கள். வேறும் சிலர் இக்கொள்ளைகளை கம்யூனிசக் கொள்கைகளுடன் தொடர்புபடுத்தி முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போட முனைகின்றனர்.

கொள்ளைச் சம்பவங்களைத் தனியே மேலெழுந்தவாரியாக நோக்கினுல் ஏதோ உள்ளவனிடம் பறிக்கப்படுவதுபோல் தான் தென்படும். ஆனுல் இக் கொள்ளைகளின் சமுதாயத் தாக்கத்தையும் அதனுல் மக்கள் படும் அவதிகளையும் காணத் தவறுவது தவருகும். ஆரம்பத்தில் வங்கிகளில் கொள்ளை போன போது அதில் அடகு வைத்த மக்களுக்கு அதன் ஒருபகுதிப் பெறுமதி வழங்கப்பட்டது. ஆனுல் காலப்போக்கில் அவ்வாறு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது. அதேபோல் அடகு கடைகளில் அடகு வைப்பவர்கள் சாதாரண மக்கள்தான் கை மாறி அடகு வைத்து காசு எடுத்து விவசாயம் செய்யும் விவசாயியை இவ்வாறன கொள்ளைகள் எவ்வாறு பாதிக்கும் என்பதை சம்மந்தப்பட்ட மக்கள் மத்திக்குச் சென்றுல் மட்டுமே தெரிந்து கொள்ள முடியும்.

மேலும் இருப்பவனிடம் கொள்ளை நடத்துவது ஒருபோதும் கொம்யூனிசம் ஆகாது. கொம்யூனிசக் கருத்துக்கள் ஒரு ஒழுங்கான தத்துவ கொள்கை நடைமுறைக்கு உட்பட்டவையாகும். ஏற்றத்தாழ்வான இச் சுரண்டல் சமுதாயத்தை புரட்சிப் போராட்டத்தின் மூலம் மாற்றி அமைப்பதையே கம்யூனிஸ்டுக்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளனரே தவிர இருப்பவனிடம் கொள்ளை அடித்து இல்லாதவனுக்கு கொடுக்கும் வேலையை ஒருபோதும் அவர்கள் மேற்கொள்வதில்லை. அப்படிச் செய்வதை யாராவது கொம்யூனிசம் என்ருல் இந்தியாவின் சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக் காரர்கள்தான் உயர்ந்த கொம்யூனிஸ்டுக்களாகக் கருத வேண்டி ஏற்படும். கொம்யூனிச்க் கருத்துக்கள் எப்பொழுதும் மக்களின் விருப்பத்தோடு மக்களின் பங்கு பற்றுதலோடு மக்களின் உண்மையான விடுதலைக்கும் விமோசனத்திற்கும் வழி சமைத்துக் கொடுப்பவையேயாகும். அது ஒருபோதும் மக்களைப் பிரிந்து நின்று மக்களுக்கு மேலால் எதையும் செய்ய முனைவதில்லை. சுரண்டல் அமைப்பை மாற்றி அமைக்க முற்படாது சுரண்டல் நடத்துவோரை தத்தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்றபடி கொள்ளை அடிப்பதோ, அல்லது கொலை செய்வதோ கொம்யூனிசம் அல்ல. கொம்யூனிசத்தின் பெயரால் இவ்வாறு எவர் செய்ய முற்பட்டாலும் அவர்கள் தோல்வி அடைவது தவிர்க்க முடியாது.

தமிழ் மக்கள் மிகவும் திக்கற்றியான நிலையில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களது எதிர்கால விடுதலைக்கும் விமோசனத்திற்கும் சரியான கொள்கை கோட்பாடு, நடைமுறை ஆகிய ஆழமான சிந்தனையின் மூலம் தேடப்பட வேண்டும். நடப்பவ சகலதிற்கும் ஆமாம் சாமி போடும் நிலை மாறவேண்டும். சரியை சரி என்றும் தவறை தவறு என்றும் எடுத்துக்கூறி, தவறுனவற்றுக்கு சப்பை கட்டாது சரியானவற்றை முன்னெடுக்க முயலவேண்டும். அப்பொழுது தான் தமிழ் மக்களின் விடுதலைப் பயணம் சரியான திசை செல்ல முடியும்.

உலகில் கம்யூனிஸ்ட்டுக்கள் தலைமைதாங்கிய மாபெரும் ரஷியப் புரட்சியும் சீனப் புரட்சியும் உண்மையான விடுதலைப் பாதையில் சென்றமையாலே வெற்றி பெற்றன. கறுப்பை வெள்ளை என்றும், வெள்ளையை சிவப்பு என்றும் ஏதோ தத்தமது நிலைக்கு ஏற்ப சுய வியாக்கியானங்களின் மூலம் அத்தகைய சமூதாய மாற்றத்திற்கான புரட்சிகள் வெற்றி பெறவில்லை. எனவே தான் கொள்ளைகள், கொலைகள். ஆட்கடத்தல் என்பனவற்றை எல்லாம் கொம்யூனிசத்துடன் இணைத்துப் பார்ப்பது உண்மைகளை மக்களுக்கு மறைப்பதாகும். அதே வேளை கம்யூனிசக் கருத்துக்களின் மீது மக்களுக்கு அதிருப்தியையும், வெறுப்பையும் ஏற்படுத்த முயலும் ஒரு போக்காகும். இத்தகைய தவறுன கருத்துப் பரப்பலுக்கு எதிராக உண்மையான விடுதலை விரும்பிகளும் மக்களும் விழிப்பாக இருப்பது அவசியம்.

# தமிழ் பேசும் மக்களும் பிரதேச சுயாட்சியும்

**வெகுஜனன்**

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு பிரதேச சுயாட்சி அமைப்பு முறைதான் நிரந்தரத் தீர்வாக அமைய முடியும் என்ற கொள்கையை மாக்சிச-லெனினிச வாதிகள் மிக நீண்ட காலமாக வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். இன்று இனப்பிரச்சினை மோசமடைந்து தேசிய ரீதியான நெருக்கடிகளையும் ஆபத்துக்களையும் தோற்றுவித்துள்ள இவ்வேளை பிரதேச சுயாட்சி பற்றிய கருத்துக்கள் பரவலாக வற்புறுத்தப்படுகிறது. இதனால் பிரதேச சுயாட்சி பற்றிய சரியான அர்த்தத்தை முன்வைப்பது அவசியமாகும்.

சமுதாயத்தின் அடிப்படையான முரண்பாடு வர்க்க முரண்பாடு என்றும், வர்க்க முரண்பாட்டின் காரணமாக உருவாகக் கூடிய சகல பிரச்சினைகளையும் வர்க்கப் போராட்டத்தின் மூலமே முடிவுக்கு கொண்டு வரமுடியும் என்றும் மாக்சிசம் வற்புறுத்துகின்றது. ஆகவினாலேயே மாக்சிச லெனினிச வாதிகள் எப்பொழுதும் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினையை வர்க்கப் போராட்டத்திற்கு அப்பாற்பட்ட தனியொரு அம்சமாகக் கொள்ளாது வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாகக் காண்கிறார்கள். அவ்வாறு தேசிய இனப்பிரச்சினையை வர்க்க முரண்பாட்டு அம்சங்களுடன் இணைத்து ஆராய்ந்து வர்க்கப் போராட்டத்தின் மூலம் அதற்கான தீர்வைக் கண்டதில் தோழர் லெனின் மாக்சிசத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கினார். லெனின் காலத்திலும் அவருக்குப் பின்னாலும் தோழர் ஸ்டாலின் தேசிய இனப் பிரச்சினையின் வர்க்க குணாம்சங்களை மேலும் தெளிவுபடுத்தி, தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு வர்க்கப் போராட்டத்தின் வெற்றியில் தங்கியிருப்பதை நடைமுறை உண்மைகளாக்கி உறுதிப்படுத்தினார். ரஷியாவில் நடந்த அக்டோபர் புரட்சிக்கு முன்பு முதலாளித்துவ—வர்க்க—ஜனநாயகப் புரட்சியின் ஒருபகுதியாக இருந்த தேசிய இனப்பிரச்சினையானது அக்டோபர் புரட்சிக்குப் பின்பு தொழிலாளி வர்க்க—சோஷலிசப் புரட்சியின் ஒரு பகுதியாக மாறிவிட்டது என்ற தோழர் ஸ்டாலினின் ஆய்வை தோழர் மாசேதுங் அவர்கள் சீனாவின் தேசிய இனப்பிரச்சினையில் பிரயோகித்து சீன நிலைமைகளுக்கு ஏற்ப வளர்த்தெடுத்து சீனப்புரட்சியின் மூலம் சீனாவின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணக் கூடியதாக இருந்தது. தேசிய இனப்பிரச்சினை பற்றிய உண்மையான மாக்சிச லெனினிச சாராம்சத்தையும் அதன் வளர்ச்சியையும் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் ஆராயவும், முடிவுகளுக்கு வரவும் மனமற்ற சிலர் தமக்கு அளவாக மாக்சிடம் இருந்தும், லெனினிடமிருந்தும் சில பகுதிகளை மட்டுமே எடுத்துக்கொள்கிறார்கள். தோழர் லெனினின் பிற்கால கட்டுரைகளையோ அல்லது ஸ்டாலினின் மிகத் தெளிவானதும், மிக நுணுக்கமானதுமான 1925ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட "தேசிய இனப்பிரச்சினையைப் பற்றி மீண்டும் ஒருமுறை" (மாக்ஸிஸமும் தேசிய இன, காலனியல் பிரச்சினையும் ஆங்கிலப் பதிப்பு லண்டன் 1947) என்ற கட்டுரையையோ அல்லது தோழர் மாசேதுங் அவர்களது கட்டுரைகளையோ காணத் தவறி விடுகிறார்கள். இத்தகையவர்கள் மாக்ஸ்—லெனின் ஆகியோருடன் மட்டும் தமது மாக்சிசப் படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். இது எவ்வகை இயங்கியல் பொருள் முதல் வாதப் பார்வை என்பது அவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியதாகும். எனவே நமது நாட்டின் தேசிய இனப்பிரச்சினை பற்றிய சரியான நிலைப்பாட்டிற்கு வரவேண்டுமாயின் வரட்டுவாதப் போக்கிலோ அன்றி புத்தகவாத அணுகுமுறையிலோ விஷயங்களைப் பார்க்காது மாக்ஸ் முதல் மாஓசேதுங் வரையிலான மாக்சிச மேதைகளின் கருத்துக்களையும், நடைமுறை வெற்றிகளையும் இயங்கியல் வளர்ச்சிப் போக்கில் காண்பதன் மூலம் சரியான நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் எழுபத்தைந்து சதவீதமானவர்கள் சிங்களவர். இவர்கள் மொழி பிரதேசம், பொருளாதாரம், கலாச்சாரம், என்பனவற்றின் அடிப்படையில் ஒரு தேசிய இனமாக உள்ளனர். ஏனைய இருபத்தைந்து சதவீதமான மக்களில் பறங்கியர், மலாயர், பாகிஸ்தானியர் என்போர் சிறுசிறு தொகையினர் தவிர்ந்த ஏனையோர் தமிழ் பேசும் மக்களாவர். இத் தமிழ் பேசும் மக்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனமாவர். இத் தமிழ் தேசிய இனத்துடன் எவ்வகையிலும் தமிழ் பேசும் இந்திய வம்சாவழி மக்களான தமிழர்களை இணைத்துப் பார்க்க முடியாது. அதேபோல் தமிழ் பேசும் முஸ்லீம் மக்களையும் இணைக்கமுடியாது. அவர்கள் தமிழ்பேசும் சிறுபான்மையினரே அன்றி தமிழ்த்தேசிய இனத்திற்குள் அடங்குவோர் அல்லர். அதற்கு வரலாற்று, பொருளாதார, பிரதேச கலாச்சார அம்சங்கள் அடிப்படைக் காரணங்களாக இருக்கின்றன. எனவே மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய பன்னிரண்டு சதவீதத்தினரே தமிழ்த் தேசிய இனத்தவராக இலங்கையில் காணப்படுகின்றனர். இத் தமிழ் தேசிய இனம் வாழ்ந்து வரும் பாரம்பரிய பிரதேசங்களில் பெரும்பாலானவை இயற்கை வளங்கள் மிகக்குறைந்தவை என்பதும் சுயமான பொருளாதார வளர்ச்சியின்மைக்கு இது ஒரு அடிப்படைக் காரணம் என்பதும் கவனத்திற்குரியவையாகும். அதனாலேயே தமிழ்த்தேசிய இனத்தைச் சேர்ந்த கணிசமானோர் அவர்களது பாரம்பரிய பிரதேசங்களுக்கு வெளியே ஏனைய பிரதேசங்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சிங்கள தேசிய இனத்தின் மத்தியிலேயே இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது அத்தகைய வாழ்வுக்கான பொருளாதார நிர்ப்பந்தங்களைப் புரிந்துகொள்ள மறுப்பது குறுகிய அரசியல் அறியாமைக்குட்பட்டதேயாகும். எனவே எழுபத்தைந்து வீதமான சிங்கள தேசிய இனமும், பன்னிரண்டு சத வீதமான தமிழ் தேசிய இனமும், ஏனைய தமிழ் பேசும் சிறுபான்மையினரான முஸ்லீம்களும், இந்திய வம்சாவழியினரும் ஒருவரை ஒருவர் நிராகரித்து அல்லது ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ முடியும் என்பது சாத்தியமற்றதொன்றாகும். ஒரு தேசிய இனத்தை மற்றொரு தேசிய இனம் நிராகரித்து வாழ முற்படும் சந்தர்ப்பத்தைவிட ஒற்றுமையாக வாழக் கூடிய சாத்தியப்பாடுகளே அதிகம் உண்டு,

இலங்கையின் வரலாற்றுப் போக்கில் பிரித்தானிய காலனியாதிக்க வாதிகளாலும், அதற்குப் பின் அரசு அதிகாரத்தைக் கைப்பிடித்த இனவாத ஆளும் சக்திகளாலும, 1977ம் ஆண்டு பதவிக்கு வந்த பெருமுதலாளித்துவ பேரினவாத ஜே. ஆர், தலைமையிலான ஆட்சியினாலும், திட்டமிட்டு உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளையும் அவற்றின் விளைவுகளையும் நீக்கிவிட்டு வர்க்க ஒற்றுமையும், வர்க்கப் போராட்டத்தின் வெற்றியை நோக்கிய சரியான பாதையையும் ஒருவர் விளங்கிக் கொண்டால் இந் நாட்டு தேசிய இனங்கள் இரண்டும் ஏனைய சிறுபான்மையினரும் பிரிந்து வாழ வேண்டிய சந்தர்ப்பம் இல்லாதொழிந்து இறுக்கமாக இணைந்து வாழக்கூடிய நிலை அதிகரித்த வீதத்தில் இருப்பதை அவதானிக்க முடியும். அதனாலேயே முதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்கத்தின் கடுமையான நிர்ப்பந்தங்களால் பிரிந்து வாழவேண்டும் என்றவகையான சிந்தனைக்கு தள்ளப்பட்ட தமிழ் தேசிய இனத்தின் ஒரு பகுதி மக்கள், தொழிலாளிவர்க்கத்

(4-ம் பக்கம் பார்க்க)

# நிலம் அபகரிக்கும் கூட்டமே

வட பகுதியில் குறிப்பாக வளம் மிக்க நிலங்களைக் கொண்ட பிரதேசங்களில் நடைபெற்றுவரும் நில அபகரிப்புப் பற்றி பல கடிதங்கள் செம்பதாகைக்கு கிடைத்

முற்றிலும் புதுமையும் ஆச்சரியமும் பெறும் வகையில் கேட்கமுடிந்தது. எழுபத்தைந்து வயது கொண்ட ஒரு நிலமற்ற கூலி விவசாயி. அவர் ஒரு தாழ்த்தப்பட்ட

துள்ள இவ்வகை பிரதேச சுயாட்சி பற்றிய கருத்துக்கள் பரவலாக வற்புறுத்தப்படுகிறது. இதனுல் பிரதேச சுயாட்சி பற்றிய சரியான அர்த்தத்தை முன்வைப்பது அவசியமாகும்.

சமுதாயத்தின் அடிப்படையான முரண்பாடு வர்க்க முரண்பாடு என்றும், வர்க்க முரண்பாட்டின் காரணமாக உருவாகக்கூடிய சகல பிரச்சினைகளையும் வர்க்கப் போராட்டத்தின் மூலமே முடிவுக்கு கொண்டு வரமுடியும் என்றும் மாக்சிசம் வற்புறுத்துகின்றது. ஆகலினுலேயே மாக்சிச லெனினிசவாதிகள் எப்பொழுதும் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினையை வர்க்கப் போராட்டத்திற்கு அப்பாற்பட்ட தனியொரு அம்சமாகக் கொள்ளாது வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாகக் காண்கிறார்கள். அவ்வாறு தேசிய இனப்பிரச்சினையை வர்க்க முரண்பாட்டு அம்சங்களுடன் இணைத்து ஆராய்ந்து வர்க்கப் போராட்டத்தின் மூலம் அதற்கான தீர்வைக் கண்டதில் தோழர் லெனின் மாக்சிசத்திற்கு முன்பு முதலாளித்துவ—வர்க்க—ஜனநாயகப் புரட்சியின் ஒருபகுதியாக இருந்த தேசிய இனப்பிரச்சினையானது அக்டோபர் புரட்சிக்குப் பின்பு தொழிலாளி வர்க்க—சோஷலிசப் புரட்சியின் ஒரு பகுதியாக மாறிவிட்டது என்ற தோழர் ஸ்டாலினின்ஆய்வை தோழர் மாசேதுங் அவர்கள் சீனுவின் தேசிய இனப்பிரச்சினையில் பிரயோகித்து சீன நிலைமைகளுக்கு ஏற்ப வளர்த்தெடுத்து சீனப்புரட்சியின் மூலம் சீனுவின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணக் கூடியதாக இருந்தது. தேசிய இனப்பிரச்சினை பற்றிய உண்மையான மாக்சிச லெனினிச சாராம்சத்தையும் அதன் வளர்ச்சியையும் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் ஆராயவும், முடிவுகளுக்கு வரவும் மனமற்ற சிலர் தமக்கு அளவாக மாக்சிடம் இருந்தும், லெனினிடமிருந்தும் சில பகுதிகளை மட்டுமே எடுத்துக்கொள்கிறார்கள். தோழர் லெனினின் பிற்கால கட்டுரைகளையோ அல்லது ஸ்டாலினின் மிகத் தெளிவானதும், மிக நுணுக்கமானதுமான 1925ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட ''தேசிய எவ்வகை இயங்கியல் பொருள்முதல்வாதப் பார்வை என்பது அவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியதாகும். எனவே நமது நாட்டின்

## வெகுஜனன்

தேசிய இனப்பிரச்சினை பற்றிய சரியான நிலைப்பாட்டிற்கு வரவேண்டுமாயின் வரட்டுவாதப் போக்கிலோ அன்றி புத்தகவாத அணுகுமுறையிலோ விஷயங்களைப் பார்க்காது மாக்ஸ் முதல் மாஓசேதுங் வரையிலான மாக்சிச மேதைகளின் கருத்துக்களையும், நடைமுறை வெற்றிகளையும் இயங்கியல் வளர்ச்சிப் போக்கில் காண்பதன் மூலம் சரியான நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் எழுபத்தைந்து சதவீதமானவர்கள் சிங்களவர். இவர்கள் மொழி பிரதேசம், பொருளாதாரம், கலாச்சாரம், என்பனவற்றின் தேசிய இனத்துடன் எவ்வகையிலும் தமிழ் பேசும் இந்திய வம்சாவழி மக்களான தமிழர்களை இணைத்துப் பார்க்க முடியாது. அதேபோல் தமிழ் பேசும் முஸ்லீம் மக்களையும் இணைக்கமுடியாது. அவர்கள் தமிழ்பேசும் சிறுபான்மையினரே அன்றி தமிழ்த்தேசிய இனத்திற்குள் அடங்குவோர் அல்லர். அதற்கு வரலாற்று, பொருளாதார, பிரதேச கலாச்சார அம்சங்கள் அடிப்படைக் காரணங்களாக இருக்கின்றன. எனவே மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய பன்னிரண்டு சத வீதத்தினரே தமிழ்த் தேசிய இனத்தவராக இலங்கையில் காணப்படுகின்றனர். இத் தமிழ் தேசிய இனம் வாழ்ந்து வரும் பாரம்பரிய பிரதேசங்களில் பெரும்பாலானவை இயற்கை வளங்கள் மிகக்குறைந்தவை என்பதும் சுயமான பொருளாதார வளர்ச்சியின்மைக்கு இது ஒரு அடிப்படைக் காரணம் என்பதும் கவனத்திற்குரியவையாகும். அதனுலேயே தமிழ்தேசிய இனத்தைச் சேர்ந்த கணிசமானேர் அவர்களது பாரம்பரிய பிரதேசங்களுக்கு வெளியே ஏனைய பிரதேசங்களில் வாழநிர்ப்பந்திக்கப்பட்டதும், அதற்குப் பின் அரசு அதிகாரத்தைக் கைப்பிடித்த இனவாத ஆளும் சக்திகளாலும, 1977ம ஆண்டு பதவிக்கு வந்த பெருமுதலாளித்துவ பேரினவாத ஜே. ஆர், தலைமையிலான ஆட்சியினுலும், திட்டமிட்டு உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளையும் அவற்றின் விளைவுகளையும் நீக்கிவிட்டு வர்க்க ஒற்றுமையும், வர்க்கப் போராட்டத்தின் வெற்றியை நோக்கிய சரியான பாதையையும் ஒருவர் விளங்கிக் கொண்டால் இந் நாட்டு தேசிய இனங்கள் இரண்டும் ஏனைய சிறுபான்மையினரும் பிரிந்து வாழ வேண்டிய சந்தர்ப்பம் இல்லாதொழிந்து இறுக்கமாக இணைந்து வாழக்கூடிய நிலை அதிகரித்த வீதத்தில் இருப்பதை அவதானிக்க முடியும். அதனுலேயே முதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்கத்தின் கடுமையான நிர்ப்பந்தங்களால் பிரிந்து வாழவேண்டும் என்றவகையான சிந்தனைக்கு தள்ளப்பட்ட தமிழ் தேசிய இனத்தின் ஒரு பகுதி மக்கள், தொழிலாளிவர்க்கத்

(4-ம் பக்கம் பார்க்க)

# நிலம் அபகரிக்கும் கூட்டமே நிறுத்து உன் நீசச் செயலை!

வட பகுதியில் குறிப்பாக வளம் மிக்க நிலங்களைக் கொண்ட பிரதேசங்களில் நடைபெற்றுவரும் நில அபகரிப்புப் பற்றி பல கடிதங்கள் செம்பதாகைக்கு கிடைத்துள்ளன. உழைப்பாளி மக்கள் சார்பாகவும், நிலமற்ற ஏழைமக்கள் சார்பாகவும் குரல் கொடுத்து வரும் செம்பதாகை இந் நில அபகரிப்புப் பற்றி அம்பலப்படுத்தி, கண்டனக்குரல் கொடுத்து அதைத் தடுத்து நிறுத்த உதவ வேண்டும் என அக் கடிதங்களில் கோரப்பட்டுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக செம்பதாகை மூன்று தோழர்களைச் சம்பந்தப்பட்ட ஐந்து இடங்களுக்கு அனுப்பி மக்களிடம் இருந்து தகவல்களைப் பெற்றது. அத் தகவல்களை அத் தோழர்கள் இங்கே தொகுத்துத் தருகிறார்கள்.

''நாங்கள் சென்ற ஐந்து இடங்களில் நான்கு செம்மண் பிரதேசங்களாகவும் ஒன்று சாதாரண மண் பிரதேசமாகவும் இருந்தன. செம்மண் பிரதேசங்களில் மக்களிடம் இருந்து பெற்ற தகவல்கள் கிட்டத்தட்ட ஒரே தன்மையுடையனவாக இருந்தன. அவை அரச காணிகளை ஏற்கனவே அதிகநிலம் படைத்திருப்பவர்கள் பல்வேறு வழிகளில் தம்வசப் படுத்தும் செயல்களாகக் காணப்படுகின்றன. ஓரிடத்தில் கிட்டத்தட்ட இருநூறு பரப்புக்கு மேற்பட்ட அரச காணிகளை அவர்கள் தம்முள் பிரித்து ஏற்கனவே தோட்ட நிலங்களாக்கிக் கொண்டு விட்டார்கள். அதே இடத்தில் காணியற்ற பலர் இருந்த போதிலும் அம் மண்ணின் வளத்தையும் அதன் எதிர்காலப் பயனையும் கருத்திற்கொண்டு இவ் அபகரிப்பாளர்கள் ஏதோ தமது மூதாதையரின் சொத்து என்ற கதையைப் பரப்பி ஆட்சி உரிமைப்படி அக் காணிகளுக்கு கள்ள உறுதிகளையும் முடித்துக் கொண்டார்கள். தமது இக் கைங்கரியங்கள் கிளறப்படாதிருக்க அரச நிர்வாக இடங்களிலும் தமது செல்வாக்கை ஏற்கனவே செலுத்தியதன் காரணமாக நாட்கள், மாதங்கள், வருடங்கள் செல்லச் செல்ல அரச காணிகள் அபகரிப்பாளர்களின் காணிகளாகக் கைகளில் உறுதிகளுடன் இன்று காட்சி தருவதாக மக்கள் கூறியதைக் கேட்டோம்.''

''வேறொரு இடத்தில் தமக்கு ஏற்கனவே உள்ள தோட்ட நிலத்துடன் இணைந்த அரச காணியை நாளந்தம் எல்லை கூட்டி, கல்லடித்து தமதாக்கிக்கொண்ட பகுதிகளை மக்கள் எமக்குக் காட்டினர். சில காலத்திற்கு முன்பு அரசாங்க நில அளவையாளர்கள் அளந்து எல்லை வைத்த எல்லைக் கல்லை பற்றைக்குள் இருந்து தாம் கண்டெடுத்ததாகவும் அந் நிலம் இன்று ஒரு தனிநபருக்கு சொந்தம் என்று கூறப்படுவதாகவும் மக்கள் தெரிவித்தனர். அதே இடத்தில் கற்பார் நிறைந்த கலட்டிக்காணியின் மத்தியில் ஒரு சிறு துண்டு நிலத்தில் (நூறு கன்று அளவு) ஒருவர் பயிர் செய்கிறதை மக்கள் காட்டினர். அதன் நோக்கம் அச்சிறு துண்டு நிலம் நாளடைவில் பெரும் காணியாக கல் அடித்து தோட்டமாக மாற இருப்பதையும் அங்கு காண முடிந்தது. இவை எல்லாம் அரச காணிகள். மக்களின் பாஷையில் அபகரிப்பு நிலங்கள்.''

''மற்றொருஇடத்தில் மக்கள் கூறிய தகவல்கள் என்னவென்றால், தமக்கு கண் முன்னே அரச காணிகளை ஏற்கனவே நிலபுலன் உள்ளோர் தேவைக்கு அதிகமான நிலையில் அபகரிக்கும்போது, நிலமற்றவர்களும் தமது தேவைக்கு எடுக்க முற்பட்டபோது தடுக்கப்பட்டார்களாம். கிராம சேவகர் தொட்டு கிராமப் 'பெரியவர்கள்' வரை வந்து இவை அரச காணிகள் இதில் நீங்கள் வீடு கட்டக்கூடாது என்றும் இதை மீறினுல் அரசு வழக்குத் தொடரும் என்றும் அச்சம் காட்டித் தடுத்த சந்தர்ப்பங்களையும் மக்கள் எடுத்துக் கூறினர்.''

அடுத்த ஒரு கிராமத்திற்குச் சென்றேம். அங்கு நில அபகரிப்பின் பல கதைகளை முற்றிலும் புதுமையும் ஆச்சரியமும் பெறும் வகையில் கேட்கமுடிந்தது. எழுபத்தைந்து வயது கொண்ட ஒரு நிலமற்ற கூலி விவசாயி. அவர் ஒரு தாழ்த்தப்பட்ட வருமாவர். அவர் கூறினுர் எனது வயது காலத்தில் வெறும் கலட்டிகளாத் தேடுவாறற்று இருந்த காணிகளுக்கெல்லாம் இன்று சொந்தம் கொண்டாடுகிற ஆட்களைப் பார்த்தால் உதெல்லாம் கள்ள உறுதியள் எண்டு அடிச்சுச்சொல்லுவன். உந்த விதானைக்கு முப்பது நாற்பது வருஷங்களுக்கு முந்தி இருக்கிற வளவையும், கொஞ்சத் தோட்டத்தையும் தவிர வேற காணிணியளே இல்லை. இப்ப உந்த ஊர் முழுதுக்கும் அவர் தான் உறுதி வைச்சிருக்கிறாராம். இரண்டு வழியிலை அவருக்கு காணியள் வந்திருக்கு. ஒன்று அறுதி ஈட்டிலை கன காணியளை அமத்திப்போட்டான். இரண்டாவது நானூறு பரப்புக்குமேலை உந்தக் கலட்டியளுக்கு வேறே ஆளின்ரை பேரிலை உறுதியை முடிச்சு அதை ஆட்சியாக்கிப் போட்டு கொஞ்சக்காலம் செல்லத் தான் விலைக்கு வாங்கினமாதிரி வாங்கி ஆட்சியும் நிந்தமும் கட்டிப்போட்டான் பாவி. விதானையாய் இருந்த தாலை வலுலேசா விஷயத்தை முடிச்சுப் போட்டு இப்போ

(5-ம் பக்கம் பார்க்க)

# காந்தியின் தேசத்தில் கலவரங்கள் நடப்பது ஏன்?

மகாத்மா காந்தி இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்து இந்திய மக்களை விடுதலை பெறச் செய்தவர் என்போர் பலர். கிடைத்த சுதந்திரமும், பெற்ற விடுதலையும் இந்திய மக்கள் அனைவருக்கும் உரியதாகவில்லை, அது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கே உரித்தானது என்பர் சிலர். ஆனால் இன்று காந்தியின் தேசத்தில் நடைபெறுபனவற்றை உற்று நோக்கினால் பின் கூறப்பட்ட கருத்து நிலையே உண்மையாகிறது.

காந்தி பெற்ற சுதந்திரமும் விடுதலையும் இந்தியாவிற்கே தனித்துவமான பல சமூகப் பிற்போக்குத் தனங்களுக்கு எவ்வித முடிவையும் கட்டவில்லை, தீண்டாமையும் சாதிக் கொடுமைகளும் அந்நாட்டில் இருந்து அகலவே இல்லை. அவற்றை ஒழிக்க காந்தி மேற்கொண்ட எந்த வழி முறைகளும் வெற்றி அளிக்கவில்லை. மன மாற்றத்தின் மூலம் எதிர் காலத்தில் சாத்தியமாகும் என காந்தியினாலேயே எதிர்பார்க்கப்பட்ட பல சமூகக் கொடுமைகள் அவர் உயிருடன் இருந்தபோதும் அல்லது இறந்து முப்பத்தேழு ஆண்டுகளுக்குப் பின்பும் சாத்தியமாகாது போயிற்று. அந்த அசிங்கத்தனங்கள் அடிக்கடி இந்தியாவின் பல பாகங்களிலும் வெளிக் கிளம்பி உலகின் முன்னிலையில் தோற்றமளிக்கவே செய்கின்றன. அவற்றின் அண்மைய சம்பவங்களே குஜராத் கலவரங்களாகும்.

இந்தியாவின் மேற்கு மாநிலம் குஜராத்தாகும். இம் மாநிலம் மகாத்மாகாந்தியின் சொந்த மாநிலம். குஜராத்தின் தலைநகர் ஆமதாபாத். பரோடா, சூரத் போன்ற நகரங்களும் முக்கியமானவை. இந்தியாவின் சுதந்திரப் போராட்டக் காலங்களில் மேற்கூறப்பட்ட நகரங்கள் பல வரலாற்று சம்பவங்களுக்குப் பெயர் போனவையாகும். அவ்வாறான மாநில நகரங்களில் கடந்த மூன்று மாதங்களுக்குமேல் வெறுக்கத்தக்க கலவரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட சமூக மக்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு, பதவி உயர்வு என்பனவற்றில் சலுகைகள் அதாவது குறிப்பிட்ட வீத இட ஒதுக்கீடுகள் வழங்கப்படக் கூடாது. அவ்வாறு வழங்கப்பட்ட இருபத்தைந்து சதவீத இட ஒதுக்கீட்டை எதிர்த்தே உயர்சாதி இந்துக்கள் கலவரங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். கலவரம் இட ஒதுக்கீட்டைச் செய்த அரசுக்கு எதிரானதாக மட்டும் நடைபெறவில்லை. அதன் மோசமான கொடுமைகள் பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகவே இடம் பெறுகின்றன. உயர்சாதி இந்துக்கள் ஒருபுறமாகவும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட, முஸ்லீம் மக்கள் மற்றொரு புறமாகவும் என்ற நிலையில் கலவரங்கள் நடைபெறுகின்றன. இதுவரை இக் கலவரங்களில் இருநூறு பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். அதிகம் பாதிப்பை பெற்றுள்ளவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட, முஸ்லீம் மக்களாவர். ஒரு குடிசையில் வைத்து பதினான்கு பேர் அவர்களில் மூன்று பெண்கள் இரண்டு குழந்தைகள் உயிருடன் கொளுத்தப்பட்டனர். இது போன்ற அநாகரீக அக்கிரமங்கள் இந்த மாநிலத்தில் மட்டுமல்ல தமிழ்நாடு உட்பட இந்தியாவின் சகல மாநிலங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக நடந்து வருவது புதுமையல்ல. தமிழ் நாட்டுப் பண்ணையார்மார் அண்ணாத்துரையின் ஆட்சிக் காலத்தில் கீழ் வெண்மணிக் கிராமத்தில் நாற்பத்திரண்டு தாழ்த்தப்பட்டோரை குடிசைகளில் வைத்துக் கொழுத்திய சம்பவம் பழங்கதை. இப்போது குஜராத்தில் நடப்பவை புதுக்கதை. இக்கலவரங்களை பொலீஸ் அடக்கமுடியாது ராணுவம் அழைக்கப்பட்டே கலவரத்தை அடக்கும் முயற்சிகள் நடைபெற்றன. இப்போதும் நிலைமை வழமைக்குத் திரும்பவில்லை.

இதில் இருந்து தெரிந்து கொள்ளக் கூடியது ஒன்று தான். இந்தியாவின் சமூக அமைப்பானது அதற்கு எவ்வளவுதான் பழங்காலப் பென் முலாம் பூசினாலும் அதன் மோசமான ஏற்றத் தாழ்வுள்ள தன்மைகளும் அவற்றின் சமூகக் கொடுமைமைகளும் இந்தியாவின் ஏகப் பெரும்பாலான சாதாரண மக்களை எவ்வளவிற்கு வஞ்சித்து வருகின்றது என்பதையே பார்க்கவேண்டும்.

(5-ம் பக்கம் பார்க்க)

## பிரதேச சுயாட்சியும்

......... 3-ம் பக்கத் தொடர்

தின் தலைமையில் உண்மையான ஜனநாயகத்தை நிலை நாட்டி அதன் மூலம் ஒரு சோஷலிச அமைப்பை நோக்கிய பாதையில் இணைந்து வாழமுடியும் என்ற நிலைக்கு நிச்சயம் வரமுடியும் என்பதே மாக்சிச — லெனினிசவாதிகளின் நம்பிக்கையாகும்.

இவ்வாறு இணைந்து வாழ்வதை வற்புறுத்தும் மாக்சிச லெனினிச வாதிகள் தேசிய இனங்களின் ஒற்றுமைக்கும் ஏனைய சிறுபான்மையின மக்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதமாக பிரதேச சுயாட்சிஎன்ற அமைப்பு முறையை முன்வைக்கிறார்கள். இப்பிரதேச சுயாட்சி முறையானது தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு சில முன் நிபந்தனைகளை விதிக்கின்றது. அதாவது பெரும் தேசிய இனம் தனது பெரும் அகங்கார தேசிய வெறியைக் கைவிடவும், சிறு தேசிய இனங்களின் மீதான அடக்குமுறைகளைக் கைவிடவும் கோருகிறது. வரலாற்றுக் கசப்பு மிக்க சம்பவங்களை யிட்டு சிறு தேசிய இனங்களு

நடந்துகொள்வது என்பதைக் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இதிகாசங்கள், புராணங்கள், இலக்கியங்களில் கூறப்பட்டவற்றை மேலும் இறுக்கிப் பிடித்துக் கொண்டு நாம் ஆண்டவர்கள் திரும்பவும் ஆளவேண்டும் என்ற அர்த்தமற்ற நிலைப்பாட்டை உதறித் தள்ளவேண்டும். இத்தகைய கோஷங்கள் தமிழர்கள் மத்தியில் உள்ள சொத்துடையோருக்கும், உயர் வர்க்கத்தினருக்கும் உதவி வந்த கடந்தகாலச் சந்தர்ப்பங்களை ஒரு விமர்சன ரீதியில் பார்ப்பது அவசியம். அதாவது தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியிலும் ஒருவகை அகங்காரப் பேச்சு இருப்பதையும் அதற்குத் துணையாகக் கடலுக்கு அப்பால் இருக்கும் ஐந்து கோடி தமிழர்களைத் துணைக்கழைப்பதும், உலகத் தமிழர்களுக்கு நாடு இல்லை எனக்கூறி அதை இங்கு நிலை நாட்ட முற்படுவதுமான அர்த்தமற்ற நிலைப்பாடுகளை கைவிடவேண்டும்.

தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு கிழக்கு மாகாணங்களில் மக்களின் பூரணமான ஜனநாயக விருப்பப்படி ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச சுயாட்சி அமைப்புகளை நிறுவ முடியும். இவ் அமைப்பு முறையின் கீழ் இப்பிரதேசங்களின் தமிழ் தேசிய இனமும் ஏனைய முஸ்லீம் இந்தியவம்சாவழி சிறுபான்மையினரும் தமது விவகாரங்களை எவ்வித தலையீடும் இன்றித் தாமே மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். இப் பிரதேச சுயாட்சி அமைப்பில் பொருளாதாரம், அரசியல், கல்வி, சுகாதாரம், குடியேற்றம், மொழி, கலாச்சாரம், பிரதேசப் பாதுகாப்பு என்பனவற்றைத் நாமே கையாளக் கூடிய விதத்தில் நிர்வாக அமைப்புக்கள் செயல்படுத்தப்படும். இப்பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சியை சுயமாகவும், மத்திய அரசின் உதவியுடனும் அல்லது அதன் அனுமதியுடனும் வெளி உதவிகளைப் பெற்றும் ஏற்படுத்த முடியும்.

மைப்புகள் உருவாக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு பூரணமான பிரதேச சுயாட்சி அமைப்பு முறை ஒன்று உருவாக்கப்படவும் அதன் மூலம் தேசிய இனங்கள் பிரச்சினைகள் இன்றி சுதந்திரமாக வளர்ச்சியடையவும்கூடிய ஒரு நிலையை உடனடியாகப் பெறமுடியாது. இந்நிலையை அடைய நீண்டகாலப் போராட்டம் அவசியமாகும். அந் நீண்டகாலப் போராட்டம் பல முனைகளில் பல வழிகளில் நடைபெறும் போராட்டமாகவே இருக்கும். தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் நாட்டின் சகல இன உழைக்கும் மக்களும் ஐக்கியப்பட்டு நடத்தும் பரந்த மக்கள் போராட்டத்தின் மூலமே பிரதேச சுயாட்சி அமைப்பின் உண்மையான தன்மையை நிலை நாட்ட முடியும். முழுத் தேசத்தினதும், முழு மக்களினதும் விடுதலையுடன் கூடிய ஒன்றாகவே தேசிய இனப் பிரச்சினையைப் பார்க்கமுடியும். அத்தகைய விடுதலையின் மூலமே தமிழ்த் தேசிய இனமும் ஏனைய சிறுபான்மை மக்களும் விடுதலை பெற்று

கின்றது என்பதைக் காண மறுப்பது அறிவீனமாகும். ஆனால் இடைக்காலத் தீர்வு என்பது நமது நீண்டகாலத்தில் அடையக்கூடிய தீர்வுக்கான போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யாது பார்த்துக் கொள்ளவேண்டும். இடைக்கால தீர்வை முற்று முழுதாகநம்பி சரியான நிலைப்பாடுகளை கைவிடுவோமாயின் முற்றிலும் சரணடைந்த சரணாகதிவாதிகள் ஆகிவிடவே நேரிடும். எனவே இடைக்காலத் தீர்வாக குறைந்த பட்சம் எதையும் ஏற்றுக் கொள்ளும் அதேவேளை நாம் எமது நீண்டகால இலக்கை மறந்துவிடக் கூடாது. பகுதியைப்பற்றி சிந்திக்காது முழுமையைப் பற்றி சிந்தித்து செயல் பட நம்மையே நாம் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தேசிய இனப் பிரச்சினையின் வர்க்கத்தன்மையையும் அதன் வர்க்கப் போராட்டம் தழுவிய முழுமையான அம்சத்தையும் கணக்கில் கொண்டு மாக்சிச லெனினிச அடிப்படையில் சிந்தித்து செயல்பட தமிழ்த் தேசிய இனத்தின் முன்னேறிய முற்போக்கு சக்திகள்

விறகே தனித்துவமான பல சமூகப் பிற்போக்குத் தனங்களுக்கு எவ்வித முடிவையும் கட்டவில்லை, தீண்டாமையும்

றின் அண்மைய சம்பவங்களே குஜராத் கலவரங்களாகும்.

உயர்சாதி இந்துக்கள் கலவரங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். கலவரம் இட ஒதுக்

மட்டுமல்ல தமிழ்நாடு உட்பட இந்தியாவின் சகல மாநிலங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக நடத்து

சித்து வருகின்றது என்பதையே பார்க்கவேண்டும்.

(5-ம் பக்கம் பார்க்க)

# பிரதேச சுயாட்சியும்......... 3-ம் பக்கத் தொடர்

தின் தலைமையில் உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்டி அதன் மூலம் ஒரு சோஷலிச அமைப்பை நோக்கிய பாதையில் இணைந்து வாழமுடியும் என்ற நிலைக்கு நிச்சயம் வரமுடியும் என்பதே மாக்சிச — லெனினிசவாதிகளின் நம்பிக்கையாகும்.

இவ்வசறு இணைந்து வாழ்வதை வற்புறுத்தும் மாக்சிச லெனினிச வாதிகள் தேசிய இனங்களின் ஒற்றுமைக்கும் ஏனைய சிறுபான்மையின மக்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதமாக பிரதேச சுயாட்சி என்ற அமைப்பு முறையை முன்வைக்கிறார்கள். இப்பிரதேச சுயாட்சி முறையானது தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு சில முன் நிபந்தனைகளை விதிக்கின்றது. அதாவது பெரும் தேசிய இனம் தனது பெரும் அகங்கார தேசிய வெறியைக் கைவிடவும், சிறு தேசிய இனங்களின் மீதான அடக்கு முறைகளைக் கைவிடவும் கோருகிறது. வரலாற்றுக் கசப்பு மிக்க சம்பவங்களை யிட்டு சிறு தேசிய இனங்களுக்கு நடைமுறை நம்பிக்கை ஏற்படும் விதமான வழிகளில் பெரும் தேசிய இனம் கௌரவமாக நடந்து கொள்வது மட்டுமல்லாது முடிந்தளவிற்கு விட்டுக் கொடுப்புக்களையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும். சிறு தேசிய இனங்களின் பாரம்பரிய பிரதேசங்களையும் அவற்றின் பொருளாதாரம், மொழி, கலாச்சாரம் என்பனவற்றின் தனித்தன்மைகளையும் ஏற்று மதித்து நடக்க முற்படவேண்டும். பிரபுத்துவ அமைப்பின் கீழ் இடம் பெற்ற வரலாற்றுச் சம்பவங்கள் பல மீண்டும் மீண்டும் மிகைப்படுத்தப்பட்ட வகையில் பெரும் தேசிய இனத்தின் மத்தியில் பரப்பப்படுவது நிறுத்தப்படல் வேண்டும். அத்தகைய மிகைப்படுத்தல்களும் வெற்றிப் பிரதாபங்களும் நிச்சயம் பேரின வாதத்தின் தேசிய வெறிக்கு உரமூட்டுவதாகவே அமையும்.

அதேவேளை தமிழ்த் தேசிய இனம் சமகாலத்தின் தேசிய சர்வதேசிய நிலைமைகளுக்கு ஏற்ப எவ்வாறு நடந்துகொள்வது என்பதைக் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். இதிகாசங்கள், புராணங்கள், இலக்கியங்களில் கூறப்பட்டவற்றை மேலும் இறுக்கிப் பிடித்துக் கொண்டு நாம் ஆண்டவர்கள் திரும்பவும் ஆளவேண்டும் என்ற அர்த்தமற்ற நிலைப்பாட்டை உதறித் தள்ளவேண்டும். இத்தகைய கோஷங்கள் தமிழர்கள் மத்தியில் உள்ள சொத்துடையோருக்கும், உயர் வர்க்கத்தினருக்கும் உதவி வந்த கடந்தகாலச் சந்தர்ப்பங்களை ஒரு விமர்சன ரீதியில் பார்ப்பது அவசியம். அதாவது தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியிலும் ஒருவகை அகங்காரப் போக்கு இருப்பதையும் அதற்குத் துணையாகக் கடலுக்கு அப்பால் இருக்கும் ஐந்து கோடி தமிழர்களைத் துணைக்கழைப்பதும், உலகத் தமிழர்களுக்கு நாடு இல்லை எனக்கூறி அதை இங்கு நிலைநாட்ட முற்படுவதுமான அர்த்தமற்ற நிலைப்பாடுகளை கைவிடவேண்டும்.

இவ்வாறு சிங்கள தேசிய இனமும் தமிழ்த் தேசிய இனமும், ஏனைய சிறுபான்மையினரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும், ஒருவரை ஒருவர் மதிக்கவும், ஒருவருக்கொருவர் உதவவும் கூடிய புதிய சூழ்நிலை உருவாக்கப்படல் வேண்டும். அது பழைய பாதையில் சிந்திப்பதாலோ அன்றி அதே பாணியில் செயல்படுவதாலோ சாதிக்க முடியாததாகும். தொழிலாளிவர்க்கத்தின் தலைமையிலான விமோசனப் பாதையை நோக்கி அரசியல் ஸ்தாபன ரீதியில் புதிய ஒரு அடித்தளம் இரு தேசிய இனங்கள் மத்தியிலும் கட்டியெழுப்பப்படல் வேண்டும். நம்பிக்கையோடு இப்பணிக்கு உண்மையான மாக்சிச லெனினிச வாதிகள் அவர்கள் எங்கிருந்தாலும் முன்வரல் வேண்டும். இவ்வாறான அடித்தளத்தின் மூலம் உருவாகும் எதிர்காலப் போராட்டமே தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை தீர்வடையச் செய்யும். அத்தகைய தீர்வு பிரதேச சுயாட்சி அமைப்பாக மிளிரவே செய்யும்.

தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு கிழக்கு மாகாணங்களில் மக்களின் பூரணமான ஜனநாயக விருப்பப்படி ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச சுயாட்சி அமைப்புகளை நிறுவ முடியும். இவ் அமைப்பு முறையின் கீழ் இப்பிரதேசங்களின் தமிழ் தேசிய இனமும் ஏனைய முஸ்லீம் இந்திய வம்சாவழி சிறுபான்மையினரும் தமது விவகாரங்களை எவ்வித தலையீடும் இன்றித் தாமே மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். இப் பிரதேச சுயாட்சி அமைப்பில் பொருளாதாரம், அரசியல், கல்வி, சுகாதாரம், குடியேற்றம், மொழி, கலாச்சாரம், பிரதேசப் பாதுகாப்பு என்பனவற்றைத் நாமே கையாளக் கூடிய விதத்தில் நிர்வாக அமைப்புக்கள் செயல்படுத்தப்படும். இப்பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சியை சுயமாகவும், மத்திய அரசின் உதவியுடனும் அல்லது அதன் அனுமதியுடனும் வெளி உதவிகளைப் பெற்றும் ஏற்படுத்த முடியும்.

இப் பிரதேச சுயாட்சி அமைப்பு முறை வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப் படுத்தப்படும் அதேவேளை மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவழி மக்களுக்கும் தகுந்த வழிகளில் சுயாட்சி அமைப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும். அதேபோல் தென் இலங்கையின் ஏனைய மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்ற வகையான அமைப்புக்கள் ஏற்படுத்தப் படல் அவசியமாகும். அதேவேளை வடக்கு கிழக்கில் வழ்ந்துவரும் சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து வளர்க்க ஏற்ற சுயாட்சி உள் அமைப்புக்கள் நிச்சயம் தேவையானதாகும். அதேபோல் தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் பன்நெடும் காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வரும் தாழ்த்தப்பட்ட மக்கள் எனப் பட்டவர்களின் வாழ்வுக்கும் உரிமைகளுக்கும் உத்தரவாத மளிக்கும் சுயாட்சி உள்ளமைப்புகள் உருவாக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு பூரணமான பிரதேச சுயாட்சி அமைப்பு முறை ஒன்று உருவாக்கப்படவும் அதன் மூலம் தேசிய இனங்கள் பிரச்சினைகள் இன்றி சுதந்திரமாக வளர்ச்சியடையவும்கூடிய ஒரு நிலையை உடனடியாகப் பெறமுடியாது. இந்நிலையை அடைய நீண்ட காலப் போராட்டம் அவசியமாகும். அந் நீண்ட காலப் போராட்டம் பல முனைகளில் பல வழிகளில் நடைபெறும் போராட்டமாகவே இருக்கும். தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் நாட்டின் சகல இன உழைக்கும் மக்களும் ஐக்கியப்பட்டு நடத்தும் பரந்த மக்கள் போராட்டத்தின் மூலமே பிரதேச சுயாட்சி அமைப்பின் உண்மையான தன்மையை நிலைநாட்ட முடியும். முழுத் தேசத்தினதும், முழு மக்களினதும் விடுதலையுடன் கூடிய ஒன்றாகவே தேசிய இனப் பிரச்சினையைப் பார்க்கமுடியும். அத்தகைய விடுதலையின் மூலமே தமிழ்த் தேசிய இனமும் ஏனைய சிறுபான்மை மக்களும் விடுதலை பெற்று பிரதேச சுயாட்சி என்ற உயர் அமைப்பின் மூலம் சமத்துவமாகவும், கௌரவமாகவும், தலைநிமிர்ந்த நிலையிலும் வாழமுடியும். இது பாரியநோர் பணியாகும். இது சகல விதமான உள்நாட்டு வெளிநாட்டுப் பிற்போக்கு சக்திகளையும் ஒன்றுபட்ட மக்கள் போராட்டத்தினால் முறியடித்து வெற்றி காண்பதன் மூலமே சாத்தியமாகக் கூடியதொன்றாகும்.

மேற்கூறிய பூரணத்துவம் மிக்க பிரதேச சுயாட்சியை நீண்டகாலப் போராட்டத்தின் மூலம் பெற்றெடுக்கும் நோக்கமானது விட்டுக் கொடுப்பிற்கோ, பலியிடுவதற்கோ ஆளாக்கப்படக் கூடாது. அதேவேளை ஒரு இடைக்காலத் தீர்வாக பிரதேச சுயாட்சி என்ற பெயரிலோ அல்லது வேறு பெயரிலோ ஏற்படக் கூடிய அரசியல் தீர்வை நாம் எவ்வகையிலும் தட்டிக்கழிக்க முற்படக் கூடாது. ஏனெனில் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு ஆறுதல் நிலையும் அதற்கான தற்காலிகத் தீர்வும் தேவைப்படுகின்றது என்பதைக் காண மறுப்பது அறிவீனமாகும். ஆனால் இடைக்காலத் தீர்வு என்பது நமது நீண்டகாலத்தில் அடையக்கூடிய தீர்வுக்கான போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யாது பார்த்துக் கொள்ளவேண்டும். இடைக்கால தீர்வை முற்று முழுதாக நம்பி சரியான நிலைப்பாடுகளை கைவிடுவோமாயின் முற்றிலும் சரணடைந்த சரணாகதிவாதிகள் ஆகிவிடவே நேரிடும். எனவே இடைக்காலத் தீர்வாக குறைந்த பட்சம் எதையும் ஏற்றுக் கொள்ளும் அதேவேளை நாம் எமது நீண்டகால இலக்கை மறந்துவிடக் கூடாது. பகுதியைப்பற்றி சிந்திக்காது முழுமையைப் பற்றி சிந்தித்து செயல் பட நம்மையே நாம் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தேசிய இனப் பிரச்சினையின் வர்க்கத்தன்மையையும் அதன் வர்க்கப் போராட்டம் தழுவிய முழுமையான அம்சத்தையும் கணக்கில் கொண்டு மாக்சிச லெனினிச அடிப்படையில் சிந்தித்து செயல்பட தமிழ்த் தேசிய இனத்தின் முன்னேறிய முற்போக்கு சக்திகள் முன்வரல் வேண்டும். தமிழ்த் தேசிய இனமும் அவர்கள் சார்பாகப் போராடும் சக்திகளும் மிகவும் ஆழமாகச் சிந்தித்து அடுத்த வழியை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு வரலாற்றுச் சந்திக்கு வந்துள்ளார்கள். சரியான வழியைத் தேர்ந்தெடுப்பதும், இடைக்காலத் தீர்வு ஏற்படுமானல் அதைப் பயன்படுத்திக் கொள்வதும், நீண்டகால நோக்கை வென்றெடுக்க தம்மைத் தயார்படுத்திக் கொள்வதும் சம்பந்தப்பட்ட சக்திகளின் வர்க்கத் தன்மையையும், அரசியல் விவேகத்தையும் பொறுத்ததாகும். ஆனல் மாக்சிச லெனினிச வாதிகள் இன்றைய சூழ்நிலைகளில் இருந்து எதிர்காலத்திற்கான வாய்ப்புக்களை அதிகளவு பயன்படுத்திக் கொள்வதில் தமது முன்முயற்சிகளைப் பன்மடங்கு வேகத்துடன் செயல்படுத்த வேண்டும்.

# இந்தியாவும் இரு மேலாதிக்க வல்லரசுகளும்

உலக ஆதிக்கத்திற்கான போட்டியில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இடைவிடாது முன்செல்லுகின்றன. தரையிலும், வானிலும், ஆயுத உற்பத்தியிலும், யுத்தங்களை மூட்டுவதிலும் ஒன்றை ஒன்று முந்த முயலுகின்றன. இந்த இரு மேலாதிக்க வல்லரசுகளும் உலகின் ஒவ்வொரு நாட்டையும் ஏதாவது ஒரு விதத்தில் தத்தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே விரும்புகின்றன.

இந்தியா போன்ற பெரிய தேசத்தை அதன் பல்வேறு முக்கியத்துவத்தின் காரணமாக எந்த வல்லரசு தனது கைக்குள் வைத்திருப்பது என்பதில் இரு வல்லரசுகளுக்குமிடையில் போட்டா போட்டி இடம்பெறுகின்றது. இந்தியா போன்ற பெரியதேசம் தனது பொருளாதார அடித்தளத்தை மாற்றிக்கொள்ளாத காரணத்தால் அதன் அரசியல் கொள்கைகளும், வெளிநாட்டுக் கொள்கையும் பெரு வல்லரசுகளைச் சார்ந்து இருக்கவேண்டிய நிர்ப்பந்தங்களை உருவாக்குகின்றது.

இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்தில் அதன் தலைவர்களாக இருந்தவர்கள் நேருவின் தலைமையில் அமெரிக்காவின் செல்வாக்குக்குள் இழுக்கப்பட்டவர்களாக இருந்தனர். இந்தியாவில் பிரிட்டிஷ், அமெரிக்க பொருளாதார அடித்தளங்கள் மிகவும் ஸ்திரம் அடைந்திருந்தன. அமெரிக்காவின் ஆயுத விற்பனைக்கு இந்தியாவை ஒரு சந்தையாக்க அமெரிக்கா முயன்றது. அதன் அடிப்படையில் இந்திய—சீன எல்லைப் போர் முடுக்கிவிடப்பட்டது, இந்தியாவும் சீனவும் ஈடுபட்ட எல்லைப்போரால் வல்லரசுகள் தத்தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொண்டன. நேருவிற்கும் உள்நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு ஒரு தற்காலிக மறைவு கட்ட முடிந்தது.

இக்கால கட்டத்தில் சீன-சோவியத் உறவுகள் சீர்குலைந்தன. சோவியத்தின் தலைவர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பாவித்து இந்தியாவைத் தமது கைகளுக்குள் போட முன்வந்தனர். இந்திய-சோவி

பாகிஸ்தான் பக்கம் தன் உறவை வலுவாக்கியது. இந்தியாவிற்கு சோவியத் ஆயுதங்கள் விலையாக்கப்பட்டன. பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுதங்கள் விலைபோயின. விற்கப்பட்ட ஆயுதங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுவதாலேயே இரு வல்லரசுகளுக்கும் தொடர்ந்து ஆயுதவிற்பனை நடைபெற வாய்ப்பு இருக்கும் என்பதால் இந்திய—பாகிஸ்தான் யுத்தம் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து பாகிஸ்தானில் இருந்து பங்காளதேஷ் என்ற நாடு இந்தியாவால் பிரிக்கப்பட்ட சமயத்திலும் சோவியத் ஆயுதங்கள் இந்தியாவிற்கும், அமெரிக்க ஆயுதங்களை பாகிஸ்தானுக்கும் விலையாக்கப் பட்டன,

இந்தியாவின் உள்நாட்டு அரசியல் தேவைக்காகவும், வல்லரசுகளின் உள்ளார்ந்த விரும்பங்களுக்காகவும் பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு காணப் படவேண்டிய பிரச்சினைகளுக்காக இந்தியா மீண்டும் மீண்டும் அயல் நாடுகளுடன் யுத்தம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்த யுத்தங்களின் தன்மைகளை உணர்ந்தாலோ என்னவோ இந்திரா காந்தி தனது பிற்கால வெளிவிவகாரக் கொள்கையில் தனியே சோவியத்தின் பக்கத்தில் இந்தியா உள்ளது என்ற உலக அபிப்பிராயத்தை மாற்ற முயன்று அமெரிக்காவின் பொருளாதார ஆயுத உதவி பெற முன்வந்தார். அதன் தொடர்ச்சியாகவே ரஜீவ் காந்தியின் தற்போதைய நடைமுறை அமைந்துள்ளது எனலாம.

இன்று ரஜீவ் காந்தியின் கொள்கையானது யுத்தங்களின் மூலம் இந்தியாவின் பலத்தை பலவீனமடையச் செய்வதைவிட பொருளாதார பலமுள்ள ஒரு இந்தியாவைக் கட்டி எழுப்பவேண்டும் என்பதையே குறிக்கின்றது. இதன் அடிப்படையிலேயே ரஜீவின் கொள்கை வகுப்பாளர்களில் பெரும் பகுதியினர் இரு வல்லரசுகளில் எந்த வல்லரசின் பக்கமும் இந்தியா சாரக் கூடாது என வற்புறுத்துகின்றனர். ஆனால் இந்தியாவின் பொருளாதார

வல்லரசுக்கு பக்கம் சாரவேண்டிய நிர்ப்பந்தத்தையே கொடுக்கின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் பொறுத்தவரை தென் ஆசியாவில் ஒரு யுத்தத்தை விரும்பவில்லை. அதன் கவனம் தற்போது தென் அமெரிக்கப் பிராந்தியத்திலும், ஐரோப்பாவில் அணு ஆயுதங்களை ஸ்திரப் படுத்துவதிலுமே குறிப்பாக உள்ளது. அதேவேளை சோவியத் யூனியன் ஆசியாவில் தனது நிலையை விஸ்தரிக்க முனைகிறது. ஆப்கானிஸ்தானில், வியாட்னும் மூலம் கம்பூச்சியாவில் சோவியத் யூனியன் தனது உலக ஆதிக்க நிலைக்கு முயற்சி எடுக்கின்றது.

இவ்வாறான மேலாதிக்க வல்லரசுப் போட்டிக்கு இந்தியாவை யார் தனது பக்கத்தில் வைத்திருப்பது என்பதிலே வல்லரசுகளுக்குள் போட்டி இடம் பெறுகிறது. இந்தியா போன்ற பெரிய தேசம் இரு மேலாதிக்க வல்லரசுகளின் பிடிக்குள் அகப்படுவதால் எவ்வித பயனும் ஏற்படாது. அதற்குப்பதிலாக மேலாதிக்க வல்லரசுகளின் கபட நோக்கங்களுக்கப்பால் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையடிப்படையில் செயல்படுவதாலேயே இந்தியா தனக்கும் உலகுக்கும் பயன் உள்ள பங்களிப்பை வழங்க முடியும்.

# சர்வதேசப் பயங்கரவாதம்!

உலக ஏகாதிபத்தியவாதிகளும், ஏனைய பிற்போக்கு சக்திகளும் தமது நலன்களுக்குக் கடுமையான தாக்கங்கள், அழிவுகள், அச்சுறுத்தல்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் சர்வதேசப் பயங்கரவாதம் என்ற கூக்குரலை முன் வைக்கின்றனர். அதை ஒழிப்பதற்கு சர்வதேச ரீதியில் ஒத்துழைப்புத் தேவை என்றும் கங்கணம் கட்டுவதைக் காண முடியும். இதில் அமெரிக்கா, இஸ்ரேல், தென் ஆபிரிக்கா போன்ற உலகப் பிற்போக்கு சக்திகள் தலைமை வகிக்கின்றன. இவர்களுடைய அர்த்தத்தில் தமது ஆக்கிரமிப்பு, கொலை, கொள்ளை, சூறையாடல், சதிப்புரட்சிகள், அரசியல் தலைவர்களை—தனிநபர்களைக் கொல்லுதல் போன்ற யாவும் தங்களால் செய்யப் படவேண்டியவை என்பதே அர்த்தமாகும். ஆனால் அவர்களுக்கு எதிராக நாடுகள் சார்பாக அல்லது இவர்களால் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக அல்லது குழுக்கள்-ஸ்தாபனங்கள் சார்பாக எதிர் நடவடிக்கையில் யாராவது இறங்கினால் அதுவே பயங்கரவாதமாகக் கொள்ளப்படுகின்றது.

உதாரணமாக பாலஸ்தீன மக்களின் அகதி முகாங்களுக்குள் புகுந்து நிராயுதபாணியான மக்களைக் கொன்று குவித்த செயல் அமெரிக்காவிற்கு பயங்கர

னத்தை சில பாலஸ்தீனியர்கள் கடத்திச் சென்று பணயம் வைத்தால் அது பெரிய பயங்கரவாதமாக அமெரிக்காவிற்கு பட்டுவிடுகிறது. அமெரிக்கா லெபனானில் இஸ்ரேலியர்களுடன் இணைந்து ஈடுபட்ட படுகொலைகள் ஜனநாயகமானதாம். அதே வேளை லெபனானில் உள்ள முஸ்லீம் இயக்கம் ஒன்று அமெரிக்க விமானத்தை திசை திருப்பி பணயம் வைத்திருப்பது பயங்கரவாதமாம். இதே போல் தென் ஆபிரிக்க நிறவெறி ஆட்சி கறுப்பின மக்களுக்கு எதிராகவும், பிரிட்டிஷ் ஆட்சி அயர்லாந்து மக்களுக்கு எதிராகவும் இழைக்கும் கொடுமைகள் கொஞ்சமல்ல அவை இந்த ஏகாதிபத்திய வாதிகளுக்கு பயங்கரவாதமாகத் தென்படுவதில்லை. ஆனால் கறுப்பின மக்களும் அயர்லாந்துப் போராளிகளும் தம்மை அடக்குபவர்களுக்கு எதிராகப் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மட்டும் அவை பயங்கரவாதம் என்று அர்த்தமிடுகிறார்கள்.

எனவே பயங்கரவாதம் என்ற பதத்திற்கு பக்கசார்பான அர்த்தத்தை ஏகாதிபத்தியவாத—பிற்போக்கு சக்திகள் வழங்க முன் வருகின்றன. அதாவது தமக்கு எதிரான சகலதையும் பயங்கரவாதத்திற்குள் அடக்க அவர்கள் முனைகிறார்கள். இதை உலக மக்கள் ஏற்றுக்

கும் ஆளாக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் பல்வேறு ரூபங்களில் எழவே செய்யும். அவற்றில் சரியான கொள்கை கோட்பாட்டு வழிமுறையற்ற நடவடிக்கைகளும் இடம்பெறத்தான் செய்யும். ஆட்களைக்கடத்தல், தனிநபர்களைக் கொல்லுதல், நிராயுதபாணியான ஒன்றுமறியாத மக்களைக் கொல்லுதல் போன்ற வழிமுறைகளால் முழுமையான வெற்றிகளையோ, மக்களுக்கு விமோசனத்தையோ பெற்றுத்தர முடியாதவைதான். இவை மனித ஆவேச அல்லது உணர்ச்சி வசப்பட்ட பழிவாங்கல்கள் நீண்டகால நோக்கில் பயனற்றவை என்பது உண்மைதான். இது மக்கள் நலன் சார்ந்த நிலைப்பாட்டின் கருத்து ஆனால் ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகளைப் பொறுத்து நாம் பார்க்கும் போது அவர்களால் வர்ணிக்கப்படும் பயங்கரவாத சம்பவங்கள் உருவாகுவதற்கு காரண காரியங்களை உருவாக்கியவர்கள் அவர்களே தான் என்பதே நியாயமான கருத்தாகும்.

உதாரணமாக பாலஸ்தீன மக்களுக்கு தமது இழந்த தாயகம் கிடைக்குமானால் அவர்களின் போராட்டங்களும் முடிவுக்கு வரவே செய்யும். அதேபோல்தான் கறுப்பின மக்களும் அயர்லாந்து மக்களும். இந்தியாவில் சீக்

பொருளாதார அடித்தளத்தை மாற்றிக்கொள்ளாத காரணத்தால் அதன் அரசியல் கொள்கைகளும், வெளிநாட்டுக் கொள்கையும் பெரு வல்லரசுகளைச் சார்ந்து இருக்கவேண்டிய நிர்ப்பந்தங்களை உருவாக்குகின்றது.

இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்தில் அதன் தலைவர்களாக இருந்தவர்கள் நேருவின் தலைமையின் அமெரிக்காவின் செல்வாக்குக்குள் இழுக்கப்பட்டவர்களாக இருந்தனர். இந்தியாவில் பிரிட்டிஷ், அமெரிக்க பொருளாதார அடித்தளங்கள் மிகவும் ஸ்திரம் அடைந்திருந்தன. அமெரிக்காவின் ஆயுத விற்பனைக்கு இந்தியாவை ஒரு சந்தையாக்க அமெரிக்கா முயன்றது. அதன் அடிப்படையில் இந்திய—சீன எல்லைப் போர் முடுக்கிவிடப்பட்டது. இந்தியாவும் சீனவும் ஈடுபட்ட எல்லைப்போரால் வல்லரசுகள் தத்தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொண்டன. நேருவிற்கும் உள்நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு ஒரு தற்காலிக மறைவு கட்ட முடிந்தது.

இக்கால கட்டத்தில் சீன-சோவியத் உறவுகள் சீர்குலைந்தன. சோவியத்தின் தலைவர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பாவித்து இந்தியாவைத் தமது கைகளுக்குள் போட முன்வந்தனர், இந்திய-சோவியத் உறவு நெருக்கமடை வதைக் கண்ட அமெரிக்கா இந்தியாவின் உள்நாட்டு அரசியல் தேவைக்காகவும், வல்லரசுகளின் உள்ளார்ந்த விருப்பங்களுக்காகவும் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணப் படவேண்டிய பிரச்சினைகளுக்காக இந்தியா மீண்டும் மீண்டும் அயல் நாடுகளுடன் யுத்தம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்த யுத்தங்களின் தன்மைகளை உணர்ந்தாலோ என்னவோ இந்திரா காந்தி தனது பிற்கால வெளிவிவகாரக் கொள்கையில் தனியே சோவியத்தின் பக்கத்தில் இந்தியா உள்ளது என்ற உலக அபிப்பிராயத்தை மாற்ற முயன்று அமெரிக்காவின் பொருளாதார ஆயுத உதவி பெற முன்வந்தார். அதன் தொடர்ச்சியாகவே ராஜீவ் காந்தியின் தற்போதைய நடைமுறை அமைந்துள்ளது எனலாம்.

இன்று ராஜீவ் காந்தியின் கொள்கையானது யுத்தங்களின் மூலம் இந்தியாவின் பலத்தை பலவீனமடையச் செய்வதைவிட பொருளாதார பலமுள்ள ஒரு இந்தியாவைக் கட்டி எழுப்பவேண்டும் என்பதையே குறிக்கின்றது. இதன் அடிப்படையிலேயே ராஜீவின் கொள்கை வகுப்பாளர்களில் பெரும் பகுதியினர் இரு வல்லரசுகளில் எந்த வல்லரசின் பக்கமும் இந்தியா சாரக் கூடாது என வற்புறுத்துகின்றனர். ஆனல் இந்தியாவின் பொருளாதார அரசியல் தன்மைகளின் இயலாமையானது ஏதோ ஒரு லக ஏகாதிபத்திய வாதிகளும், ஏனைய பிற்போக்கு சக்திகளும் தமது நலன்களுக்குக் கடுமையான தாக்கங்கள், அழிவுகள், அச்சுறுத்தல்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் சர்வதேசப் பயங்கரவாதம் என்ற கூக்குரலை முன்வைக்கின்றனர். அதை ஒழிப்பதற்கு சர்வதேச ரீதியில் ஒத்துழைப்புத் தேவை என்றும் கங்கணம் கட்டுவதைக் காண முடியும். இதில் அமெரிக்கா, இஸ்ரேல், தென் ஆபிரிக்கா போன்ற உலகப் பிற்போக்கு சக்திகள் தலைமை வகிக்கின்றன. இவர்களுடைய அர்த்தத்தில் தமது ஆக்கிரமிப்பு, கொலை, கொள்ளை, சூறையாடல், சதிப்புரட்சிகள், அரசியல் தலைவர்களை—தனிநபர்களைக் கொல்லுதல் போன்ற யாவும் தங்களால் செய்யப் படவேண்டியவை என்பதே அர்த்தமாகும். ஆனல் அவர்களுக்கு எதிராக நாடுகள் சார்பாக அல்லது இவர்களால் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக அல்லது குழுக்கள்-ஸ்தாபனங்கள் சார்பாக எதிர்நடவடிக்கையில் யாராவது இறங்கினல் அதுவே பயங்கரவாதமாகக் கொள்ளப்படுகின்றது.

உதாரணமாக பாலஸ்தீன மக்களின் அகதி முகாங்களுக்குள் புகுந்து நிராயுதபாணியான மக்களைக் கொன்று குவித்த செயல் அமெரிக்காவிற்கு பயங்கரவாதமாகத் தெரியவில்லை. ஆனல் ஒரு இஸ்ரேலிய விமானங்கள் கடத்திச் சென்று பணயம் வைத்தால் அது பெரிய பயங்கரவாதமாக அமெரிக்காவிற்கு பட்டுவிடுகிறது. அமெரிக்கா லெபனனில் இஸ்ரேலியர்களுடன் இணைந்து ஈடுபட்ட படுகொலைகள் ஜனநாயகமானதாம். அதே வேளை லெபனனில் உள்ள முஸ்லீம் இயக்கம் ஒன்று அமெரிக்க விமானத்தை திசை திருப்பி பணயம் வைத்திருப்பது பயங்கரவாதமாம். இதே போல் தென் ஆபிரிக்க நிறவெறி ஆட்சி கறுப்பின மக்களுக்கு எதிராகவும், பிரிட்டிஷ் ஆட்சி அயர்லாந்து மக்களுக்கு எதிராகவும் இழைக்கும் கொடுமைகள் கொஞ்சமல்ல அவை இந்த ஏகாதிபத்திய வாதிகளுக்கு பயங்கரவாதமாகத் தென்படுவதில்லை. ஆனல் கறுப்பின மக்களும் அயர்லாந்துப் போராளிகளும் தம்மை அடக்குபவர்களுக்கு எதிராகப் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மட்டும் அவை பயங்கரவாதம் என்று அர்த்தமிடுகிறார்கள்.

எனவே பயங்கரவாதம் என்ற பதத்திற்கு பக்கசார்பான அர்த்தத்தை ஏகாதிபத்தியவாத—பிற்போக்கு சக்திகள் வழங்க முன் வருகின்றன. அதாவது தமக்கு எதிரான சகலதையும் பயங்கரவாதத்திற்குள் அடக்க அவர்கள் முனைகிறார்கள். இதை உலக மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அடக்குமுறைகளும், கொடுமைகளுக்கு மத்தியில் இருந்து அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் பல்வேறு ரூபங்களில் எழவே செய்யும். அவற்றில் சரியான கொள்கை கோட்பாட்டு வழிமுறையற்ற நடவடிக்கைகளும் இடம்பெறத்தான் செய்யும். ஆட்களைக்கடத்தல், தனிநபர்களைக் கொல்லுதல், நிராயுதபாணியான ஒன்றுமறியாத மக்களைக் கொல்லுதல் போன்ற வழிமுறைகளால் முழுமையான வெற்றிகளையோ, மக்களுக்கு விமோசனத்தையோ பெற்றுத்தர முடியாதவைதான். மனித ஆவேச அல்லது உணர்ச்சி வசப்பட்ட பழிவாங்கல்கள் நீண்டகால நோக்கில் பயனற்றவை என்பது உண்மைதான். இது மக்கள் நலன் சார்ந்த நிலைப்பாட்டின் கருத்து ஆனல் ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகளைப் பொறுத்து நாம் பார்க்கும்போது அவர்களால் வர்ணிக்கப்படும் பயங்கரவாத சம்பவங்கள் உருவாகுவதற்கு காரண காரியங்களை உருவாக்கியவர்கள் அவர்களே தான் என்பதே நியாயமான கருத்தாகும்.

உதாரணமாக பாலஸ்தீன மக்களுக்கு தமது இழந்த தாயகம் கிடைக்குமானல் அவர்களின் போராட்டங்களும் முடிவுக்கு வரவே செய்யும். அதேபோல்தான் கறுப்பின மக்களும் அயர்லாந்து மக்களும். இந்தியாவில் சீக்கியரின் நியாயமான அபிலா

(6-ம் பக்கம் பார்க்க)

## நிலம் அபகரிக்கும் கூட்........

3-ம் பக்கத் தொடர்

ஏதோ தான் பிறக்கேக்கை கையோடை கொண்டுவந்த மாதிரி கதைவிடுகிறார். நாங்களும் மனிசர்தான். எங்களுக்கு அப்பஇருந்து இப்பவும் ஒருகுழி காணி கூடக் கிடைக்கேல்லை. எல்லாம் முந்தின ஆக்களை ஏமாத்தினமாதிரி இனி ஏமாத்தேலாது. எங்கடை பொடியளும் இனி விடமாட்டாங்கள்'' என்று விஷயத்தைக் கூறிய அந்த வயதானவர் முடிவையும் கூறினார்.

கடைசியாக சாதாரண மண் கொண்ட பகுதிக்குச் சென்று தகவல் பெற்றோம். அது குடியிருப்பு நிலம். எட்டுக் குடும்பங்கள் குடியெழுப்பப்பட்டிருந்தன. அவ்வாறான குடியெழுப்பப் பட்டவர்கள் தம் கதை கூறினர். மூன்று தலைமுறைகளுக்குமேல் அந் நிலங்களில் தாம் குடியிருந்து வந்திருப்பதையும் இப்பொழுது கலைக்கப்பட்டிருப்பதையும், கலைய மறுத்தவர்களின் குடிசைகள் தீயிடப்பட்டதையும் எடுத்துக் கூறினர். இது தொடர்ந்து வந்த பழங்கதைபோல் இருந்தாலும் பல உண்மைகள் பொதிந்திருந்தன. ஒரு காலத்தில் பிரதான வீதிகளுக்குப் பக்கத்தில் குடியிருக்கப் பெருமனிதர்களான நிலச் சொந்தக் காரர்கள் அஞ்சினர்கள் அதனல் கிராமங்களின் நடுவே தமது இருப்பிடங்களை அமைத்து அதைச் சுற்றி தங்களது அடிமை குடிமைகளை இருத்தி ஆண்டனுபவித்து வந்தனர். இப்பொழுது நாகரீக வளர்ச்சி ஏற்பட்டு, புதிய வீடுகள், மின்சாரம், போக்குவரத்து, அந்தஸ்து என்பனவற்றுக்குப் பிரதான வீதிகளுக்கருகில் இருப்பது அவர்களுக்கு அவசியமாகிவிடவே வீதியோரக் காணிகளில் இருந்துவந்த ஏழைமக்களை, விவசாயிகளை, தாழ்த்தப்பட்டோரைக் குடியெழுப்பி கலைத்துவிட்டு அந்நிலங்களில் தமது இருப்பிடங்களை அமைத்துள்ளனர். இதுவும் புதிய வகை நில அபகரிப்பு என்றே மக்கள் கூறுகின்றனர்.

இவை போன்று வேறும் பல வழிகளிலான நில அபகரிப்பை நிலவுடைமையாளர்கள் நிலமற்ற, ஏழை, தாழ்த்தப்பட்ட மக்களிடம் இருந்து தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றதை நாம் சென்ற ஐந்து இடங்களில் மக்களிடம் இருந்து கேட்டறிய முடிந்தது. இவ்வித நில அபகரிப்புக்கள் மிகவும் அநீதியானவை, மக்கள் விரோதமானவை, இவை தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்.

எமது செம்பதாகை சார்பாகச் சென்ற தோழர்கள் கூறிய தகவல்களைக் கேட்டீர்கள். இத்தகவல்களின் மூலம் மக்கள் எதைக் காணுகிறீர்கள். நிலவுடைமையாளர்களும் அவர்களது கையாட்களும் அரச காணிகளையும், ஏனைய குடியிருப்பு—விவசாய நிலங்களையும் தொடர்ந்து அபகரித்து வருகிறார்கள். நிலமற்ற ஏழைமக்கள் ஏமாற்றப்பட்டு தொடர்ந்தும் அடக்கிச் சுரண்டப் படுகிறார்கள். எனவே இது அம்பலப்படுத்தப்படவேண்டியது, கண்டிக்கப்படவேண்டியது. செம்பதாகை இம்மக்கள் பக்கத்தில் நின்று வன்மையான கண்டனக்குரலைக் கொடுக்கின்றது. அதேவேளை அம்மக்களுக்கு தகுந்த ஆலோசனையையும் கூறுகிறது. அதாவது இது போன்ற வர்க்க சுரண்டலுக்கும், நில அபகரிப்புக்கும், மக்கள் ஏமாற்றப் படுவதற்கும் எதிராக மக்கள் சரியான ஸ்தாபன வழிகளில் ஐக்கியப் பட வேண்டும். வெறும் கண்டனத்துடன் நிற்காது போராடவும் முன்வரவேண்டும். அப்பொழுது மட்டுமே உழைக்கும் வர்க்கம் தனது நில உரிமைகளை நிலை நாட்ட முடியும். மக்களே ஐக்கியப் படுங்கள். சகல வகை நில அபகரிப்புக்கும் எதிராகப் போராட முன்வாருங்கள்.

## காந்தியின் தேச ........

4-ம் பக்கத் தொடர்

இத்தகைய கொடுமைகளில் இருந்து இந்திய மக்கள் நிச்சயம் விடுதலை பெற்றே தீருவார்கள். அதற்கான சமூகப் புரட்சியானது எவர் விரும்பாவிடினும் ஏற்பட்டே தீரும். இவ்வேளையிலாவது இந்தியாவைப்பற்றிய வீண் பிரமையைக் கட்டுவோரும், அதைத் தாவித்திரிவோரும் உண்மைகளைத் திரிக்காமலும் நடப்பவைகளுக்கு சப்பை கட்டாமலும் இருப்பது நல்லதாகும். ★

# தமிழர்விடுதலை வெறுமனே இன விடுதலை அல்ல!

# மக்கள் இணையும் போராட்டமே வெற்றி பெறும்!!

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது)

## சில்லாலை-சாந்தைக் கருத்தரங்கில் உரை

இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் என்றுமில்லாத கொடுமையான அடக்குமுறைகளுக்குள்ளும், அநீதியான சூழ்நிலைகளுக்கும் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் தமிழ் மக்களுக்கு முன்னால் உள்ள பாதை போராட்டப் பாதையா மட்டுமே இருக்கமுடியும். போராட்டம் என்பது தமிழர் விடுதலையை வென்றெடுக்கக் கூடியதான நீண்டகாலப் நோக்கைக் கொண்டதாக அமைய வேண்டும். அவ்வாறான போராட்டம் எதுவும் பேச்சுவார்த்தையை நிராகரிப்பதாக அமையமுடியாது. அதாவது போராட்டம் பேச்சுவார்த்தையை கண்மூடித்தனமாக நிராகரிக்கக் கூடாது. அதேவேளை பேச்சுவார்த்தையானது போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும் நிலையை உருவாக்காது பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சில்லாலை—சாந்தை என்னும் இடத்தில் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) அரசியல் கருத்தரங்கில் உரையாற்றிய தோழர் கே. செந்திவேல் குறிப்பிட்டார். கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் தோழர் செந்தில் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழர் விடுதலை என்பதன் அர்த்தம் வெறுமனே இன விடுதலை என்ற வகையில் அமையுமாக இருந்தால் அத்தகைய விடுதலையால் தமிழர் சமுதாயம் உண்மையான விடுதலையைப் பெறமுடியாது, தமிழ் மக்களின் பொருளாதார, சமூக, அரசியல் விடுதலையை அடிப்படையாகக் கொண்டதும், காலப் போக்கில் சமுதாய மாற்றத்தைக் கொண்டுவரக் கூடியதுமான ஓர் நீண்டகாலப் போராட்டத்திற்கு தமிழ் மக்களை தயார்படுத்துவதே சரியான மார்க்கமாக அமையும். இத்தகைய விடுதலைக்கும் போராட்டத்திற்கு தமிழ் மக்கள் முன்வந்து தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் பொறுப்பை ஏற்கவேண்டும். அடுத்தவர்களை நம்பியோ, அந்நிய சக்திகள் சகலதையும் பெற்றுத் தரும் என்ற பிரமையை வளர்த்தோ தமிழ் மக்கள் தங்களையும் தமது சரியான போராட்டத்திற்கான பாதை வகுப்பதையும் கைவிட்டு விடக்கூடாது என்றும் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தமிழர் விடுதலைக்கான சரியான போராட்டப் பாதையில் மக்கள் தான் பிரதான சக்தியாகத் திகழ்வர். பரந்த மக்கள் போரட்டம் என்ற தளத்தில் இளைஞர்கள் சரியான வகையில் தமது ஆற்றல்களையும், பங்களிப்புக்களையும் வழங்கினால் அது மக்கள் போராட்டங்களை பலத்துடன் முன்னெடுக்க உதவும். அதை விடுத்து தனியே இளைஞர்கள் மட்டும் போராடுவது என்ற நிலை நீடித்தால் வெற்றி என்பது கேள்விக்குறியாகி விடநேரிடும். எனவே இன விடுதலையை மட்டும் குறியாகக் கொண்டு செயல்படும் நிலையை மாற்றி தமிழ் மக்களின் அடிப்படையான தேவைகளையும் அபிலாஷைகளையும் உள்ளடக்கிய உண்மையான விடுதலைக்கான கொள்கையும் நடைமுறையும் அதற்கான போராட்ட தந்திரோபாயங்களும் வகுத்து முன்செல்லக் கூடிய புதிய நிலை ஒன்று உருவாக வேண்டும். அதனாலேயே தமிழர் விடுதலை என்பதன் உண்மையான தன்மையை தமிழர் சமுதாயம் வென்றெடுக்கவும் அனுபவிக்கவுமான நிலை உருவாக முடியும். ஆதலால் தமிழ் மக்கள் கடந்தகாலத்தின் ஒவ்வொரு அம்சங்களையும் அரசியல் அனுபவமாகக் கொண்டு தாங்கள் வகிக்கப்போகும் அரசியல் பாத்திரத்தை வரையறுத்துக் கொண்டு உண்மையான விடுதலை நோக்கி வழி நடக்க முன்வரல் வேண்டும். இதில் கவனமின்றித் தமிழ் மக்கள் இருப்பின் புதியதோர் அடிமைத்தனத்தின் மூலம் புதியவகை அடக்குமுறைகளுக்கு உள்ளாகவே நேரிடும். தமிழ் மக்கள் மட்டுமன்றி தமிழ் மக்களின் உண்மையான விடுதலைப் போராட்டத் தன்மையை நேசிக்கும் இளைஞர்சக்திகளும் உணர்ந்து கொள்வது அவசியம்.

பெரும் தொகையான கிராமிய மக்கள் கலந்து கொண்ட இப் பகிரங்க கருத்தரங்கில் தோழர்கள் எஸ். தேவரா[illegible] கதிர்காமநாதன், [illegible] தங்கலிங்கம், க. தணிகாசலம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## தாண்டவம்!

கொலைகள்
கொள்ளைகள்
கற்பழிப்புக்கள்
கருச்சிதைவுகள்
களவுகள் வகையில்
கனகன முறைகள்
கொள்ளைலாபம்
கொழுவல் மின்சாரம்
கறுப்புச் சந்தை
கசிப்பு வியாபாரம்
ஆட்களைக் கடத்துதல்
அநீதியான தீர்ப்புகள்
தான்தோன்றித்தனமான
தண்டனை வழங்கல்கள்
இன்னும் எத்தனை
இழிநிலைச் செயல்கள்
தமிழர் மத்தியில்
தாண்டவமாடுமோ

## அநுராவே......

1-ம் பக்கத் தொடர்

யூ. என். பியை எதிர்ப்பதற்கும் அல்லது தோற்கடிப்பதற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், அநுராபண்டாரநாயக்கா போன்றவர்களுக்கும் ஏற்கனவே வாய்ப்பான பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. மக்களை அணிதிரட்டி யூ. என். பியின் ஜனநாயக விரோதச் செயல்களுக்கு எதிராக, அதன் சர்வாதிகாரப் போக்கிற்கு எதிராக இன்றும் போராடக்கூடிய சந்தர்ப்பம் சுதந்திரக் கட்சிக்கு உண்டு. மக்கள் திருமதி

அநுரா கூறிவரும் இனவாதப் பாதையைத்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பின்பற்ற இருக்குமானால் அது தனக்கு மட்டுமன்றி நாட்டிற்கும் நாட்டு மக்கள் அனைவருக்குமே நாசத்தைத் தேடிக்கொள்ளவே செய்யும்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க விரைவில் இந்தியப் பிரதமரைச் சந்திக்க இருக்கிறார். அது நல்லதோர் அம்சமே. அதன் மூலம் அவர் தனது கடந்தகால இனப் பிரச்சினையில் விட்ட தவறுகளை திருத்திக் கொண்டு நியாயமான வழிகளில் இனப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட

இத்தகைய நாட்டிற்கு மர்மப் பயணம் நடத்தியது ஊகிக்க முடியாத ஒன்றல்ல. இலங்கைக்கு அதிகளவு ஆயுதங்கள் தென் கொரியாவில் இருந்து கிடைத்திருக்கிறது என்ற அரசியல் — ராணுவ வட்டாரங்களில் பேசப்பட்டவைகளை தற்போதைய திடீர் பயணம் உறுதிப்படுத்தியுள்ளது. ஒருபுறம் அரசியல் தீர்வுக்குப் பேச்சுவார்த்தை மறுபுறம் யுத்தத் தயாரிப்பு. யூ. என். பி. அழிவுப் பாதையைக் கைவிடத் தயாரில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. ★

கைகள் வரவேற்கப்பட வேண்டியவையாகும். இந்தியாவின் இத்தகைய நிதானப் போக்கையும் அதன் பேச்சுவார்த்தைக்கான முன் முயற்சிகளையும் இலங்கை அரசு சரியான விதத்தில் பயன்படுத்தி தனது பிடிவாத நிலையில் இருந்து விடுபட்டு இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுக்கு வர முன்வரல் வேண்டும். இச் சந்தர்ப்பத்தை அரசு கை நழுவ விடுமாயின் அதனால் ஒரு பெரும் தேசிய அழிவுக்கான பொறுப்பையும் பழியையும் ஏற்கவேண்டிய நிலைக்கே தள்ளப்படும்.

மயமாக்கி அதன் மூலம் உண்மைகளை மறைக்கவே ரேகன் தொட்டு ஜே. ஆர். வரை முயலுகிறார்கள். ★

**செம்பதாகைக்கு விஷேச சந்தா ரூபா 50-00 வழங்குங்கள்!**

கொள்ளைகள்
கற்பழிப்புக்கள்
கருச்சிதைவுகள்
களவுகள் வகையில்
கனகன முறைகள்
கொள்ளைலாபம்
கொழுவல் மின்சாரம்
கறுப்புச் சந்தை
கசிப்பு வியாபாரம்
ஆட்களைக் கடத்துதல்
அநீதியான தீர்ப்புகள்
தான்தோன்றித்தனமான
தண்டனை வழங்கல்கள்
இன்னும் எத்தனை
இழிநிலைச் செயல்கள்
தமிழர் மத்தியில்
தாண்டவமாடுமோ

னிஸ்ட் கட்சியின் (இடது) அரசியல் கருத்தரங்கில் உரையாற்றிய தோழர் கே. செந்திவேல் குறிப்பிட்டார். கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் தோழர் செந்தில் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழர் விடுதலை என்பதன் அர்த்தம் வெறுமனே இன விடுதலை என்ற வகையில் அமையுமாக இருந்தால் அத்தகைய விடுதலையால் தமிழர் சமுதாயம் உண்மையான விடுதலையைப் பெறமுடியாது, தமிழ் மக்களின் பொருளாதார, சமூக, அரசியல் விடுதலையை அடிப்படை

கைகளை நடபியோ, அந்நிய சக்திகள் சகலதையும் பெற்றுத் தரும் என்ற பிரமையை வளர்த்தோ தமிழ் மக்கள் தங்களையும் தமது சரியான போராட்டத்திற்கான பாதை வகுப்பதையும் கைவிட்டு விடக்கூடாது என்றும் கூறினர்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தமிழர் விடுதலைக்கான சரியான போராட்டப் பாதையில் மக்கள் தான் பிரதான சக்தியாகத் திகழ்வர். பரந்த மக்கள் போரட்டம் என்ற தளத்தில் இளைஞர்கள் சரியான வகையில் தமது

களையும் அபிலாஷைகளையும் உள்ளடக்கிய உண்மையான விடுதலைக்கான கொள்கையும் நடைமுறையும் அதற்கான போராட்ட தந்திரோபாயங்களும் வகுத்து முன்செல்லக் கூடிய புதிய நிலை ஒன்று உருவாக வேண்டும். அதனாலேயே தமிழர் விடுதலை என்பதன் உண்மையான தன்மையை தமிழர் சமுதாயம் வென்றெடுக்கவும் அனுபவிக்கவுமான நிலை உருவாக முடியும். ஆதலால் தமிழ் மக்கள் கடந்தகாலத்தின் ஒவ்வொரு அம்சங்களையும் அரசியல் அனுபவமாகக் கொண்டு

மன்றி தமிழ மக்களின் உண்மையான விடுதலைப் போராட்டத் தன்மையை நேசிக்கும் இளைஞர்சக்திகளும் உணர்ந்து கொள்வது அவசியம்.

பெரும் தொகையான கிராமிய மக்கள் கலந்து கொண்ட இப் பகிரங்க கருத்தரங்கில் தோழர்கள் எஸ். தேவராஜா, கா. கதிர்காமநாதன், தா. திருமலிங்கம், க. தணிகாசலம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## அநுராவே......

1-ம் பக்கத் தொடர்

யூ. என். பியை எதிர்ப்பதற்கும் அல்லது தோற்கடிப்பதற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், அநுராபண்டாரநாயக்கா போன்றவர்களுக்கும் ஏற்கனவே வாய்ப்பான பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. மக்களை அணிதிரட்டி யூ. என். பியின் ஜனநாயக விரோதச் செயல்களுக்கு எதிராக, அதன் சர்வாதிகாரப் போக்கிற்கு எதிராக இன்றும் போராடக்கூடிய சந்தர்ப்பம் சுதந்திரக் கட்சிக்கு உண்டு. மக்கள் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கூட்டங்களில் பெரும் தொகையில் திரளுகிறார்கள். அவற்றை எல்லாம் சரியான வழிப்படுத்த முடியாத அநுராவும் அவரோடு ஒத்தவர்களும் இனப் பிரச்சினையை வைத்து அரசியல் லாபம் பெற முனைவது மிகவும் அருவருப்புக்கான ஒன்றாகும். இது மீண்டும் வேதாளத்தை முருங்கையில் ஏற்றுவதாகும்.

இந் நாட்டின் சுதந்திரம், இறமை, மக்களின் நல்வாழ்வு என்பனவற்றில் உண்மையான அக்கறையும், நேசமும் அநுராவிற்கு இருந்திருக்குமானல் இனப் பிரச்சினையின் தீர்வைப் பொதுத் தேர்தலுக்கான கருவியாகப் பயன்படுத்த முன்வந்திருக்க மாட்டார். உள்ள பதவி பறிபோகாமல் பாதுகாக்க அல்லது அதிகாரபீடம் ஏறவேண்டும் என்பதற்கு இனவாதத்தை விட வேறு கதியே அநுராவிற்கு இல்லைப்போல் தெரிகிறது. அதனாலேயே தீர்வைக் குழப்பி அதில் லாபம் பெறும் பேச்சுக்களை அவர் நிகழ்த்துகிறார்.

அநுரா கூறிவரும் இனவாதப் பாதையைத்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பின்பற்ற இருக்குமானல் அது தனக்கு மட்டுமன்றி நாட்டிற்கும் நாட்டு மக்கள் அனைவருக்குமே நாசத்தைத் தேடிக்கொள்ளவே செய்யும்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க விரைவில் இந்தியப் பிரதமரைச் சந்திக்க இருக்கிறார். அது நல்லதோர் அம்சமே. அதன் மூலம் அவர் தனது கடந்தகால. இனப் பிரச்சினையில் விட்ட தவறுகளை திருத்திக் கொண்டு நியாயமான வழிகளில் இனப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட ஒத்துழைப்பை வழங்குவது அவசியம். அது மட்டுமல்ல இனப்பிரச்சினையின் தீர்வையும் பொதுத்தேர்தல் கோரிக்கையையும் ஒன்ருக்கி தீர்வைச் சிக்கலாக்க முனையாது இரண்டையும் வேறு வேறு விடயங்களாக அணுக முன்வரல் வேண்டும். அப்படிச் சரியான முடிவை சுதந்திரக் கட்சியும் அதன் தலைவியும் மேற்கொள்வதே அநுராவின் அர்த்தமற்றதும், இனவாதத்தை கிளறச் செய்வதுமான பேச்சுக்களை நிறுத்தச் செய்யும். இல்லாமல் எல்லோரும் சேர்ந்து இனவாதம் பேச முடிவு செய்தால் அழிவைத்தான் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். அதே வேளை இனப்பிரச்சினையின் தீர்வின்மைக்கான பழியையும் சுமக்கவேண்டி ஏற்படும். ★

## அமைச்சரின் தென்...

1-ம் பக்கத் தொடர்

பாசிச சர்வாதிகாரத்திற்குப் பல ஆலோசனைகள் பெறப்பட்டு வருகின்றது.

இத்தகைய நாட்டிற்கு மர்மப் பயணம் நடத்தியது ஊகிக்க முடியாத ஒன்றல்ல. இலங்கைக்கு அதிகளவு ஆயுதங்கள் தென் கொரியாவில் இருந்து கிடைத்திருக்கிறது என்ற அரசியல் — ராணுவ வட்டாரங்களில் பேசப்பட்டவைகளை தற்போதைய திடீர் பயணம் உறுதிப்படுத்தியுள்ளது. ஒருபுறம் அரசியல் தீர்வுக்குப் பேச்சுவார்த்தை மறுபுறம் யுத்தத் தயாரிப்பு. யூ. என். பி. அழிவுப் பாதையைக் கைவிடத் தயாரில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. ★

## பூட்டான் பேச்...

1-ம் பக்கத் தொடர்

வழங்க முன்வரல் வேண்டும். அதே வேளை எப்படியாகிலும் தீர்வை அடைவது என்ற வகையில் கண்மூடித் தனமாகவும் வழி நடக்க முடியாது. அதற்கான சூழ்நிலை இப்பொழுது இல்லை என்பதும் யாவரும் அறிந்ததே.

தற்போதைய பூட்டான் பேச்சுவார்த்தையில் இந்திய அரசும் அதன் பிரதமர் ரஜீவ் காந்தியும் வகிக்கும் பாத்திரம் நிதானமானதாகவே காணப்படுகின்றது. இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு சாத்தியமற்றது என்றும், நியாயமான அரசியல் தீர்வுதான் மார்க்கம் என்றும், இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை வலியுறுத்தியும், பிரச்சனைக்குரிய இரு தரப்பாரையும் பேச்சுவார்த்தைக்கு கொண்டு வந்ததிலும் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி கடைப்பிடித்துவரும் தற்போதைய ராஜதந்திர நடவடிக்கைகள் வரவேற்கப்பட வேண்டியவையாகும். இந்தியாவின் இத்தகைய நிதானப் போக்கையும் அதன் பேச்சுவார்த்தைக்கான முன் முயற்சிகளையும் இலங்கை அரசு சரியான விதத்தில் பயன்படுத்தி தனது பிடிவாத நிலையில் இருந்து விடுபட்டு இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வுக்கு வர முன்வரல் வேண்டும். இச் சந்தர்ப்பத்தை அரசு கைநழுவ விடுமாயின் அதனல் ஒரு பெரும் தேசிய அழிவுக்கான பொறுப்பையும் பழியையும் ஏற்கவேண்டிய நிலைக்கே தள்ளப்படும்.

## சர்வதேசப் பயங்........

5-ம் பக்கத் தொடர்

ஷைகள் பூர்த்தியாக்கப்பட்டால் சீக்கியப் பயங்கரவாதம் என்று அழைக்கப்படும் ஒன்று இருக்கமுடியாது. அதேபோல் இலங்கையிலும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் வழங்கப்பட்டால் அம் மக்கள் சார்பான போராட்டங்களும் அல்லது பயங்கரவாதம் என வர்ணிக்கப்படும் ஒன்று இருக்கவும் முடியாது.

ஆதலால் சர்வதேசப் பயங்கரவாதம் என்ற கூக்குரல் சகலநாடுகளுக்கும் மக்களுக்கும் பொதுவான ஒன்ருக இருக்கமுடியாது. அப்படிக் கூறப்படுவதற்குப் பின்னல் உள்ள ஒவ்வொரு மக்களின் பிரச்சினைகளும் அவற்றின் தீர்வுக்கான அம்சங்களும் கவனத்தில் எடுக்காது தத்தமது ஆளும் வர்க்க நிலையைப் பாதுகாப்பதற்கு மட்டும் பயங்கரவாதம் எனக் கூச்சலிட்டு அதைச் சர்வதேசமயமாக்கி அதன் மூலம் உண்மைகளை மறைக்கவே ரேகன் தொட்டு ஜே. ஆர். வரை முயலுகிறார்கள். ★

## செம்பதாகைக்கு விஷேச சந்தா ரூபா 50-00 வழங்குங்கள்!

செம்பதாகை தனது வளர்ச்சிப்பாதையில் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேற முயலுகின்றது. அதற்கு மக்களையே நாடி நிற்கின்றது. விஷேச சந்தா ஆயிரம் சேர்க்கும் இயக்கத்தில் செம்பதாகை ஈடுபட்டுள்ளது. நேரடியாக வரும் செம்பதாகைத் தோழர்களிடம் ரூபா 50 செலுத்தி விஷேச சந்தா விற்கான ரிசீட்டுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். அல்லது தபால் மூலம் ரூபா 50க்கான மணி ஓடர், காசோலை அனுப்பி அதற்கான ரிசீட்டைப் பெற்றுக்கோள்ளுங்கள். தபாலில் அனுப்புவோர் பத்திரிகை அனுப்பவேண்டிய முகவரியை தெளிவாக எழுதி அனுப்பவும். உங்கள் உதவிக்கும் ஒத்துழைப்பிற்கும் செம்பதாகை என்றென்றும் நன்றி கூறும்,

நன்றி.

நிர்வாகி
செம்பதாகை
15/1, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்

அச்சுப்பதிவு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு: சி. நவரத்தினம் 15/1 மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.